விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:-எட்டு + 12 | Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி18 திங்கட்கிழமை (04.11.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 320

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## எந்தக் கட்சியையும் புலிகள் தடை செய்ய மாட்டா

# மக்கள் தமது தலைவரை தெரிவு செய்ய

# ஜனநாயக ரீதியில் வாய்ப்பு வழங்கப்படும்

### புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டன் பி.பி.ஸிக்குப் பேட்டி

(பாங்கொக்)

**தமிழ்க் கட்சிகளின் எதிர்காலம் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எந்தக் கட்சியும், எந்த இயக்கமும் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுகிறார்களோ அவர்கள் மக்களால் தூக்கி எறியப்படுவார்கள்.**

**இந் நிலையில் விடுதலைப் புலிகள் தலையிட்டு எக் கட்சியையும் தடை செய்யவோ, அவர்களின் செயற்பாடுகளுக்கு விரோதமாகவோ செயற் படமாட்டார்கள்.**

**ஜனநாயக நீரோட்டத்தில் தங்கள் தலைவர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படும். அந் நேரம் மக்கள் விரோத சக்திகள் வெளியேற்றப்படுவார்கள். இவ்வாறு விடுலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**



கடந்த நான்கு தினங்களாக தாய்லாந்தில் ரோஸ்கார்டன் ரிசோர்டன் ஹோட்டலில் நடை பெற்ற அரசுவிடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சு வார்த்தையின் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பி.பி.ஸிக்குப் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில் பி.பி.ஸி செய்தியாளரின் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்;

தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம் கட்ட பேச்சுக்க்ளின் போது தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசியுள்ளோம்.

பயங்கர வாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர கால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள் சிறைகளில் படும் கஷ்டங்களை எடுத்துக் கூறியுள்ளோம்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் நடை பெறும் இச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தென்னிலங்கையில் சுதந்திரமாக நடமாடும் சூழ்நிலையில் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த இளைஞர்கள் தொடர்ந்து சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது கேலிக்கூத்தான விடயமாகும்.

எனினும், முதற் கட்டமாக 75 கைதிகளையும், அடுத்த கட்டமாக ஏனைய கைதிகளையும் விடுதலை செய்வதாக அரசு வாக்குறுதி அளித்துள்ளது என்றும் கூறினார்.

தமிழ்க் கட்சிகளின் செயற்பாடு தொடர்பாக அன்ரன் பாலசிங்கத்திடம்

(10பக்கம் பார்க்க)

### பிரதமர் உறுதி மொழி தராவிட்டால்

## வரவு செலவுத் திட்டத்தை நாம் பகிஷ்கரிப்போம்!

### அதாவுல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் உரிமைக்ள் பாதுகாப்புத் தொடர்பாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா உறுதி மொழி தராவிட்டால், நாம் நாளை மறுதினம் சமர்ப்பிக்கப்படும்

தைப் பகிஷ்கரிக்கும் முஸ்லிம் எம்.பிகளின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல அரசை எச்சரித்துள்ளார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நடை பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் மட்டக் குழுக்

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்



அன்பு வாசகர்கள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

இனிய தீபாவளி நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– வலம்புரிக் குடும்பம் –

## தாய்லாந்துப் பேச்சுக்கள்

பாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா உறுதி மொழி தராவிட்டால், நாம் நாளை மறுதினம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டத்தையும் பகிஷ் கரிப்போம் என்று பாராளுமன்றத்

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை இரவு நடை பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் அதாவுல குழுவினர் கட்சி யின் தலைவர் ரவூப் ஹக்கீம்

(10பக்கம் பார்க்க)

# மூன்றாம் கட்டப் பேச்சு நோர்வேயின் தலைநகரில்

(பாங்கொக்)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுத லைப் புலிகளுக்குமிடையிலான மூன் றாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் எதிர் வரும் டிசம்பர் மாதம் 2ம் திகதி தொடக் கம் 5ம்திகதி வரை நோர்வேத் தலை நகர் ஒஸ்லோவில் நடை பெறவுள்ளது.

இம் மாதம் 25ம் திகதி ஒஸ்லோவில் நடை பெறும் வடக்குக் கிழக்கு அபிவி ருத்திக்கான நிதியுதவி மாநாட்டில் அரச,புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். இதனைத் தொடர்ந்து இடம் பெறும் மூன்றாம் கட்டப் பேச்சு வார்த்தையில்

(10பக்கம் பார்க்க)

# தாய்லாந்துப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்தேறியது

## அமைச்சர் பீரிஸ் - பாலா கூட்டாகத் தெரிவிப்பு

(பாங்கொக்கில் இருந்து அன்ரனி ஜீவா)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையே தாய்லாந்தில் கட ந்த நான்கு தினங்களாக நடை பெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை வெற்றி கரமாக முடிவுற்றதாக பேச்சுவார்த் தையில் கலந்து கொண்ட அரச தரப் புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அர சியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கூட்டாகத் தெரிவித் துள்ளனர்.

கடந்த நான்கு தினங்களாக ஆறு அமர்வுகளில் நடைபெற்ற பேச்சு வார்த் தையின் பின் இரு தரப்பினரும் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசினார் கள்.

இச் செய்தியாளர் மாநாடு நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் தலைமையில் நடைபெற்றது. இதில் அரசு புலிகள் பிரதிநிதிகளுடன்

(10பக்கம் பார்க்க)

# இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி அளிக்க இந்திய - அமெரிக்க உதவி பெறப்படும்

## கடற்படைத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி அளிப்பதற்கு அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- இந் நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஏற்கனவே அந் நாடுகளுடன் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்கா ஏற்கனவே பல தடவை கள் இலங்கைக் கடற்படைக்கு பயிற்சி அளித்திருந்தது.

இந் நிலையில் மேலும் அமெரிக் காவின் உதவி நாடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவிடம் இருந் தும் கடற்படைக்கு பயிற்சி வழங்க உதவி கோரப்பட்டுள்ளது என்றும் தள பதி தயாசந்தகிரி மேலும் கூறினார்.

இதேவேளை சமாதான முயற்சிகள்

(10பக்கம் பார்க்க)

# பூமியை நோக்கி வரும் விண்கல் இலங்கையில் விழப்போகிறது !

## எதிர்வு கூறுகிறார் லலித் விஜயவர்த்தனா

(கொழும்பு)

எதிர்வரும் ஓரிரு வாரங்களில் விண் கல்லொன்று பூமியில் விழவிருக்கின் றது என்றும்இதுஇலங்கையின் நித்தம் புலப் பகுதியில் விழலாம் என்றும் இயற் கைப் பேரழிவுகள் தொடர்பான நிபுணர் லலித் விஜயவர்த்தன கூறியுள்ளார்.

இவரது முன்னைய எதிர்வு கூறல்கள் சரியாக நிகழ்ந்துள்ளதாக அவதானி கள் தெரிவித்துள்ளனர். விஜயவர்த்த னவின் கூற்றுப் படி பூமியை நோக்கி வரும் எரிகல் கம்பஹா மாவட்டத்தில் எங்கேனும் ஒரு நெல்வயலிலோ, புதர் நிலத்திலோ விழலாம்.

எரிகல்லின் பரிமாணம் எத்தகைய தென்றோ, அது ஏற்படுத்தக் கூடிய அழிவு எந்தளவு என்றோ அவர் எதுவித

(10பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**G C.E O/L**

பரீட்சை மைய ஆங்கில இலக்கண இலக்கிய வகுப்புக்கள் Exam (oriented English Language Literature Classes) ஆரம்பம் 2-11-2002பதிவுகள் 31-10-2002முதல் தொடர்பு கோ.சுப்பிரமணியம் 62 பழம் ரோட் கந்தர்மடம். (6154)

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியில் வசிக்கும் மதியழகர் நிர்மலா என்பவருடைய அடையாள அட்டை (அ.அ.இல.091057232) (பிறந்த திகதி 06.09.1972) காணாமல் போய்விட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். (5206)

## இராசி பலன்

4 - 11 - 2002
(ஐப்பசி 18, திங்கள்)
அமாவாசை பி.இ 3.9 வரை
சித்திரை காலை 7.51 வரை
இராகுகாலம்-7.34-9.04
நல்லநேரம்-12.04-1.34
கௌரி விரதம் முடிவு, அமாவாசை விரதம்.

**மேடம்**
அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், மனமகிழ்ச்சி.

**இடபம்**
எதிர்பாராத நன்மை, செய்தொழில் முன்னேற்றம், சந்தோசமான சம்பவம், முயற்சி பலிதம்.

**மிதுனம்**
பெரியோர் வெறுப்பு, சிறு வியாதி, காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம்.

**கடகம்**
விரோதம், மனச்சஞ்சலம், இனசன தொடர்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
காரிய நன்மை, பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை சந்தோசமான நிலை.

**கன்னி**
மனக்கிலேசம், விவாதம், கண் வலி, காரிய தாமதம்.

**துலாம்**
உடல் நலம், உஷ்ண ரோகம், விருந்துபசாரம், பெரியோர் ஆதரவு.

**விருச்சிகம்**
நண்பர்கள் விரோதம், சுர வியாதி, காரிய அலைச்சல், சுப செலவு.

**தனுசு**
நினைத்த காரியம் கைகூடும் குடும்பத்தில் மகிழ்ச்சி பொருள் சேர்க்கை, நல்ல வரவேற்பு.

**மகரம்**
தொழில் நிலை மாற்றம், நல்ல சம்பவம், முயற்சி கைகூடும், உறவினர் சந்திப்பு.

**கும்பம்**
திடீர் பயணம், முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு, போசன சுகம்.

**மீனம்**
உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், வியாதி, தர்மம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அம்பாறை மாவட்ட சமூகசேவை கட்டமைப்பு பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்துவதற்கு அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், பொதுநல சமூக மேம்பாட்டு நிறுவனங்களுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அம்பாறை மாவட்ட சமூகசேவை நிறுவனங்களின் கூட்டமைப்பு பணிப்பாளர் எஸ். செந்துராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் எஸ். செந்துராஜ் தலைமையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்களுக்கு ஆலோசனை வழங்கும் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கு ஒவ்வொரு அரச சார்பற்ற, சமூக அமைப்புகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன் சங்கங்கள் புதிய பல திட்டங்களை நடைமுறைப்படுத்து நல்வேண்டும்.

அத்துடன் பெரிய பல திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு உலக நாடுகளின் நிதியக் குழுக்கள் யாழ். மாவட்டத்திற்கு உதவிகள் செய்வதற்கு காத்து இருக்கின்றன. அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்று யாழ் குடாநாட்டை அபிவிருத்திப் பணியில் இட்டுச் செல்வதற்கும் மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதிலும் அனைத்து அரச சார்பற்ற சமூக அமைப்புகள் தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்ட நிறுவனங்கள் சர்வதேச நிதிநிறுவனங்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து அவர்களிடம் உங்களது பல புதிய திட்டங்களை வெளிக்காட்டப்பட வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகளும் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (06)

# தாய்லாந்து பேச்சை அடுத்து முஸ்லிம் மக்களிடம் இருந்த சந்தேகம் முற்றாக களையப்பட்டுள்ளது

## பிரதமரின் திட்டமிடல் ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்து ரேஸ்கார்டன் ஹோட்டலில் நேற்று நடைபெற்றுமுடிந்த முதலாவது சுற்று இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தையை அடுத்து முஸ்லிம்மக்கள் மத்தியில் இருந்தசந்தேகங்கள் களையப்பட்டுள்ளதாக பிரதமரின் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு ஆலோசகர் அலிசாகிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சின் ஆலோசகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்குதொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கடந்த சிலநாட்களாக இனப்பிரச்சினை தீர்வு குறித்த விடயத்தில் முஸ்லிம சமூகங்கள் இடையேயும் அரசியல் பிரமுகர்கள் மத்தியிலும் வீணான சந்தேகங்கள் ஏற்பட்டிருந்தன.

ஆனால் தாய்லாந்தில் தற்போது நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளுக்கு இணங்க வடக்கு கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு என அமைக்கப்படும் கூட்டுச் செயலணியின் செயற்பாடுகளில் எந்தவித பாரபட்சமும் இடம்பெறாது என தாய்லாந்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தாய்லாந்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசின் தலைவரும் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் கருணாவும் சந்தித்தவேளை இதற்கான இணக்கம்காணப்பட்டது என்பது தெரிந்ததே. (த-8)

## நிதர்சனம் தொலைக்காட்சிச் சேவை

(கொழும்பு)

தமிழர் கலாசாரத்தை பிரதிபலிக்கும் 'நிதர்சனம்' தொலைக்காட்சிச் சேவை விரைவில் வடக்கு-கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் ஏதாவது ஓர் இடத்தில இதற்கான நிறுவனம் அமைக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றத்தையும் கலாசார மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு இந் நிலையம் செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## கோப்பாய் பாடசாலையில் நூலகவாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நூலகவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

நூலகவாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் நூலகத்திற்கு அரிய நூல்களை சேகரிக்கவும், பெற்றுக் கொள்ளவும், இக்காலத்தில் பாடசாலைச் சமூகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், வங்கிகள், மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யுமாறு கடித மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## மண்ணெய் அருந்திய குழந்தை பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக மண்ணெண்ணெயை குடித்த குழந்தை பரிதாபகர மரணத்தை தழுவிய மனதை உருக்கும் சம்பவம் கோண்டாவில் கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரஸ்தாப குழந்தை யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காதநிலையிலேயே உயிரிழந்துள்ளது.

சந்திரகுமார் பிரதீபாஎன்ற 18 மாதக் குழந்தையே உயிரிழந்ததாகும். (க06)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சந்தசுவாமி கோவில் ஸ்கந்தசஷ்டி உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ம் திகதி சூரசம்ஹார உற்சவமும், 11ம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ந-5

## மருதங்கேணி பாலம் புனரமைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பாலம் புனரமைக்கப்பட்டு மக்கள் போக்கு வரத்திற்காக நேற்று முனதினம் அனுமதிக்கப்பட்டுளளது.

இப்பாலம் உடைந்திருந்தமையினால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மககள் போககுவரத்து மற்றும் உணவுத்தட்டுப்பாட்டிற்கு உள்ளாகியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-43)

## பொலிஸ்ஸார் இன்று விசேட கடமை

(யாழ்ப்பாணம்)

தீபாவளித் தினத்தை முன்னிட்டு யாழ் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் இன்று யாழ்நகரில் விசேட கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

யாழ்.நவீனசந்தைப்பகுதி யாழ் பேருந்துநிலையம் ஆஸ்பத்திரிவீதி ஆகியஇடங்களில் பொலிஸார் விசேட கடமையில் ஈடுபடுத்தப்படுவரென யாழ். போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது, (த-6

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை தபால் நிலையத்தில் தபால்அதிபராக கடமையாற்றிய சபாரத்தினம் திருலோகசிங்கம் இம்மாதம் முதல் வசாவிளான் தபாலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## மகஜர் கையளிப்பு

(திருநெல்வேலி)

தீவுப்பகுதி வேலணையில் அமைந்துள்ள ஐயனார்வித்தியாலயத்திலிருந்து கடற்படையினர் வெளியேற மறுத்து வருகின்றனர்.

கடற்படையினரை வெளியேற்றக்கோரி தீவக நலன்காப்பு ஒன்றியமும் வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் கடற்படை போர்நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் மகஜர் ஒன்றை நேற்று சர்ப்பித்தன.

மகஜரைப் பெற்ற கடற்படையினர் தாங்கள் இவ்வித்தியாலயத்திலிருந்து வெளியேற முடியாது என திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

(க-43)

## புத்தளத்தில் கொள்ளை

(புத்தளம்)

ஆயுதம் தரித்த மூன்றுபேர் கொண்ட குழுவினர் 46ஆயிரம் பணம் மூன்றுகையடக்க தொலைபேசிகள் மோட்டார் சைக்கிள் என்பனவற்றை கொள்ளையடித்த சம்பவம் புத்தளம்பகுதியில் பெரும் தோட்டம் ஒன்றில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொள்ளையிடப்பட்ட மோட்டார் சைக்கிள் ரயில் நிலையம் ஒற்றிற்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் புத்தளம் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக புத்தளம் பொலிசார் புலன் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (க-10)

## எந்தமிழ் உறவே எழுவாயோ

உமியை வைத்து உரலில் இடிக்கும்
ஒன்றும் இல்லார் செயலாலே
துமியென இம் மண் தூறிய கற்பனை
தருபல துன்பம் தீராதோ
தமிழனை இழிவு தந்திட வைக்கும்
தன்மையாம் இந்தத் திருநாளை
இமியதும் இல்லா இம்மண் அகற்றிட
எந்தமிழ் உறவே எழுவாயோ

- சேரன். த. சிவராசா.

# பிரதமர் ரணில் தலைமையில் ஒஸ்லோவில் உயர் மாநாடு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம்மாதம் 25 ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் தாய்லாந்தில் இடம்பெற்று வரும் இலங்கை அரசு-விடுதலைப் புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை விபரங்கள் இம்மாநாட்டில் முக்கிய இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கென பிரதமர் ரணில் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் விரைவில் நோர்வே பயணமாவர் என்று பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இக்குழுவில் நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி, அமைச்சர்களான ஜி எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் இடம்பெற உள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் சார்பிலும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே கோரிக்கைகளை விடுக்கப் பட்டிருக்கின்ற போதும் அதுபற்றி அரசாங்கச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் சுற்றின் பின்னரே முடிவு செய்யும் என அரசு தரப்பு தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வரிசையில் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட பல நாடுகள் அங்கம் வகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது (க)

# 84 பாடசாலைகளை மீளப் புனரமைக்க 26 கோடி நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களின் 84 பாடசாலைகளை மீளப் புனரமைக்க ''நெக்கோட்'' ஸ்தாபனம் 26 கோடியே 32 லட்சம் ரூபாவை வழங்க தீர்மானித்துள்ளது.

இத்துடன் 6 ஆசிரியர் விடுதிகளை அமைக்க 36 லட்சம் ரூபாவும் பாடசாலை தளபாடங்களை வழங்க 6 கோடி 81 இலட்சம் ரூபாவும் 210 பாடசாலைகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனால் 1500 ஆசிரியர்களும் 50 ஆயிரம் மாணவர்களும் பயன் பெறவுள்ளனர்.

இதேவேளை 160 பாடசாலைகளுக்கு சுகாதார சுத்திகரிப்பு மலசலகூட வசதிகளை ஏற்படுத்த 4 கோடியே 24 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-7)

## முதியவர் விபத்தில் காயம்

(மந்திகை)

சைக்கிளில் சென்ற முதியவர் எதிரே வந்த இராணுவ வாகனத்துடன் விபத்திறகுள்ளானதில் காயம் அடைந்தநிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இம்மாதம் முதலாந்திகதி நண்பகல் குஞ்சர் கடைப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் கரவெட்டி கிழக்கு இழவி தோட்டத்தைச் சேர்ந்த நல்லதம்பி கனகசபை (வயது 73) என்பவரே காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (உ-23)

# ஐஸ் உற்பத்தி நிலையங்களின் புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

## பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச்சமாசத்திற்குச் சொந்தமான முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த இரு ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகளும் படையினர் வசமிருந்து மேற்படி சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவற்றின் புனரமைப்புப் பணிகள் விரைந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததும் அருகில் கடல் உணவுகளை பதனிடும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும்,

இந்தப் பணிகள் பூரணப் படுத்தப்பட்டால் பெருமளவு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் நம்பிக்கை வெளியிட்டார். (உ-6)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலய அதிபர்களுக்கு ஜீ ரீ சற் அனுசரணையுடனான பாடசாலை மட்டக் கல்வி அபிவிருத்தி ஒரு நாள் செயலமர்வு வரணி ஆசிரியர் நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை அதிபர்கள் அனைவரும் தவறாது பங்குபற்றுமாறும் பங்குபற்ற முடியாத விடத்து உப அதிபர்கள் பங்குபற்றுவதை உறுதி செய்து கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ செல்வசராசா அதிபர்களைக் கேட்டுள்ளார். (உ-10)

## பல்கலை பெண்கள் அணி மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

களனிப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பு றோயல் கல்லூரி, சுகததாஸ விளையாட்டு உள்ளரங்கம், கொழும்பு பல்கலைக்கழக மைதானம் ஆகியவற்றில் இலங்கைப் பல்கழைக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (உ-3)

## 2 வது பீடாதிபதியாக மாதாஜி அம்மா

(யாழ்ப்பாணம்)

மீசாலையில் ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார், இரண்டாவது பீடாதிபதியாக சுவாமி ஸ்ரீ காயத்திரிமாதாஜி அம்மாவை நியமித்துள்ளார்.

ஆச்சிரம ஆசாரங்களின்படி கடந்தவெள்ளி அன்னைக்கு பட்டம் சூட்டப்பட்டு பெண்களுக்கான குரு குலத்தின் அனைத்துப் பொறுப்புக்களும் மாதாஜி அம்மாவிடம் ஒப்படைக்கப்பட்டன. (உ-10

## அடுத்த ஆண்டுக்கான கல்வி அபிவிருத்திதிட்டமிடல் கிளிநொச்சியில்நடைபெறும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 2003 ஆம் ஆண்டிற்கான கல்வி அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இம்மாதம் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஐ. என் இஸ்தீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம் உட்பட இப்பிரதேசங்களில் உள்ள 24 வலயக்கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டுகளின்போது வழமையாக திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சிலேயே இதுபோன்ற கூட்டங்கள் நடைபெற்றன.

ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையை அடுத்து இக் கூட்டம் முதற் தடவையாக கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-08)

## இன்று இரண்டாம் கட்ட சந்திப்பு

(தென்மராட்சி)

சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்டச் சந்திப்பு இன்று பி.ப.2.00 மணிக்கு இணையத்தில் நடைபெறவுள்ளது. (க-77)

## சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்த 16 வயது சிறுவன் நேற்று முன்தினம் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளான்.

யாழ்ப்பாணம்மவுண்காமல் வீதியைச் சேர்ந்த பொனிஸ், கனிபல் றொசான் என்ற சிறுவனை தமிழீழ விடுதலைப் புலிகளின்யாழ். மாவட்ட நடுவப் பணியகப் பிரமுகர் கந்தமான் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் பெற்றோரிடம் ஒப்படைத்தார். (க-05)

## புலமைப் பரிசில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் கல்விபயின்றுவருப் செல்விதிரு லோகசிங்கம் வாலாம்பிகை சென்றெய்- சிபா- ஜப்பானிய அஞ்சல் சேவையாளர் ஒன்றியத்தினால் வழங்கப்படும் அ. தொ. தொ. உத்தியோகத்தர் சங்க அங்கத்தவர்களது பிள்ளைகளுக்கான புலமை பரிசில் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான பரிசும் சான்றிதழும் எதிர்வரும் 05 ஆம் திகதி கொழும்பு பிரான்ஸ் ஏசியன் ஹோட்டலில் நடைபெறவுள்ள வைபவத்தில் வைத்து மக்கள் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ்பாக்கீர் மார்க்கார் வழங்குவார்.

இவர் யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# காவலரண் பகுதியில் பயிர்ச் செய்கைக்கு அனுமதி

(கொழும்பு)

மன்னார்-மதவாச்சி நெடுஞ்சாலை பிரதேசத்தை அண்டியுள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் அமைந்துள்ள பகுதிகளில் விவசாய பயிர்ச் செய்கையை மேற் கொள்ள மக்களுக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது;

மன்னார் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் பாதுகாப்புக் கூட்டத்திலேயே இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ கரலியற்ற வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில வருடங்களாக பிரதான நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரம் உடைய விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாகவே இருந்தன.

பாதுகாப்பு அமைச்சின் இவ்வனுமதியை தொடர்ந்து, அபபகுதி விவசாயிகள் பெரும் போக பயிர்ச் செய்கைக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் பொலிஸார் தங்கியுள்ள பொதுமக்களின் வீடுகளை மீண்டும் உரிமையாளர்களிடம் கையளிப்பது தொடர்பாகவும் நேறறு முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப் பட்டது.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர், உள்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வன்னிப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (க-8)

---

## நீண்ட ஆயுள்

சத்தம் அது என்றுகோட்டார்களாம்அதற்கு அந்தப்பெரியவர் ஒன்றும்மில்லை! மாடியில் இருக்கிறவர் எங்கள் அப்பாதான்,எப்போது பார்த்தாலும் தண்ணி போட்டுக் கொண்டு ஆடிக் கொண்டேயிருப்பார் அவரிடம் எல்லாக் கெட்ட பழக்கங்களும் உண்டு என்றாராம.

சும்மா நகைச்சுவைக்காக அவரால் சொல்லப்பட்டது இவ்விடயம், இதைப் பெரிதாக எடுத்து அந்த வழியில் எல்லாரும்கெட்டுப்போகஆரம்பித்து விடாதீர்கள்!

தன்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொழில்நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

15 தொழில் நீதிமன்றங்களுக்கு அடுத்த ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் நிதிஒதுக்கப்படும்என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ கோத்த தேசியஊழியர் சங்கத் தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் உருவச்சிலையை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

இனிவரும் காலங்களில் தொழில்சார் வழக்குகளை ஒருமாத காலத்தினுள் விசாரணை செய்துமுடிப்பதற்காகவே இந்நிதி ஒதுக்கப்படவுள்ளதுடன்,

பல வருடங்களாக இந்நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கும் சுமார் 25 ஆயிரம் வழக்கு விசாரணைகளும் பூர்த்திசெய்யப்படவுள்ளதுஎன்று குறிப்பிட்டார். (உ-8)

## தகவல் பணிப்பாளர் ஓய்வுபெற்றார்

அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க கடந்த 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கடந்த 8 வருடங்களாக மேற்படி பதவியில் பணியாற்றி வந்துள்ளார்.

சமூகசேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் நீதியமைச்சின் பிரதிச் செயலாளராகவும்,ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளராகவும்,செய்திப் பணிப்பாளரிற்கு மேலதிக யுத்தச்செய்தி தணிக்கை அதிகாரியாகவும் ஜனாதிபதியின் அலுவலக ஊடகப்பிரிவு பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தீர்ப்பு தொடர்பாக எம்.பிக்கள் ஆராய்வர்

(கொழும்பு)

மத்தியவங்கி குண்டு வெடிப்பு வழக்கின்தீர்ப்பு தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீதான தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்வது தொடர்பாக தாம் ஆராயப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டமை ஏற்கனவேதெரிந்ததே. (வ)

# இன்று ஒரு தகவல்

## நீண்டஆயுள் வேண்டுமா?

ஒருநாள் தற்கொலையைப் பற்றி சில விபரங்களை சொல்லிக்கொண்டிருந்தோம். அதைக் கேட்டுவிட்டு மிகவும் வேகமாக ஒருவர் வந்தார். அவர்வந்த வேகத்தைப்பார்த்தால் எனக்கும் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அவ்வளவு வேகமாகவந்தார். அந்தத்தகவலைக் கேட்டுவிட்டு 'சார் எந்தமுடிவுக்கு வந்தாரோ தெரியவில்லையே' என்று தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்போல இருந்தது எனக்கு! செய்முறையால் அதுமுடியாத காரியம் என்பதனால் பேசாமல் இருந்தேன். வந்தவர், 'சார் தற்கொலை பண்ணிக்கொண்டு அரைகுறைவயதிலேயேசெத்து போகிறவர்களைப்பற்றி காலை நேரத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்... அதைவிட தீர்க்காயுசாக வெகு காலம் சௌக்கியமாக வாழ்கிறவர்களைப்பற்றி ஏதாவது விபரம்இருந்தால் சொல்லக் கூடாதா' என்றார்.

சொல்லவில்லையென்றால் விடமாட்டார்போல இருந்தது. உடனே தேட ஆரம்பித்ததில் சில விபரங்கள் கிடைத்தன. உலகத்திலேயே அதிக காலம் உயிரோடுவாழ்ந்த மனிதன்யார்? அதிகார பூர்வமாகக்கிடைத்த தகவலின்படி அவர் ஒரு ஜப்பான்காரர். அவரின்பெயர் சிச்ஷியோ இதமி. இவர்1986, பெப்ரவரி 21 லேதான் இறந்துபோனார் அந்தச் சமயத்தில் இவருக்கு வயது 120 வருஷம் 237 நாள் ஜப்பானிலேயுள்ள மிகவும் பின்தங்கிய தீவுஒன்றிலே பிறந்து வளர்ந்தவர். கடுமைமையான உழைப்பாளியாம் வயதான காலத்திலும் உடற்பயிற்சி செய்வாராம். மீன் காய்கறி இவைகளை நிறையச் சாப்பிடுவாராம். மற்ற மாமிசங்களைக் குறைவாகத்தான் சாப்பிடுவாராம்

சோவியத் யூனியனில் இது சம்பந்தமாக சில ஆய்வுகள் நடந்தன. அங்கே 1960களில் பெண்களுடைய சராசரி வயது 73.6 ஆண்கள் 64.5 1972 இல் பார்த்தால் இது படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்து இருந்தது. அப்போது பெண்கள சராசரி வயது 72. 6 ஆண்கள் 62. 4 அப்படி என்றால் இப்போது இன்னும் குறைந்து இருக்கும் என்று தானே நினைக்கிறீர்கள். அது தான் இல்லை. இப்போது அங்கே பெண்களுடைய சராசரி வயது 73 6 ஆண்கள் 65 இது எப்படி சாத்தியமானது என்று நினைக்கிறீர்கள்? மதுபானங்களுக்கு எதிராக நடந்த பிரசாரம்தான் காரணம். மதுபான உபயோகம் குறையக் குறைய வயது கூடிக்கொண்டே வருகிறது. அது மட்டுமல்ல, சாலை விபத்துக்களும் 37 சதவீதம் குறைந்துவிட்டதாம்.

பொதுவாக உலகத்திலேயே அதிக வயதானவர்கள் இருக்கிற நாடுகள் ஸ்காண்டிநேவியா, ஜப்பான் இரண்டுமே. ஆனால் சோவியத் யூனியன் ஆய்வாளர் 'கோஸ்லோவ' என்ன சொல்கிறார் என்றால், அவர் பார்த்த வரைக்கும் காகசஸ் மலைப் பகுதியில் இருக்கிறவர்கள் தான் அதிகநாள வாழ்கிறார்கள் என்று சொல்கிறார். அந்தப் பகுதியில் இருக்கிறவர்களுடைய அதிகபட்ச வயது 150. அங்கேயிருக்கிறவர்கள் மட்டும் அதிகநாள் வாழ்வதற்கு என்ன காரணம்? கோஸ்லோவ் என்ன சொல்கிறார் என்றால்; பொதுவாக மலைப்பகுதியிலே உயிரினங்களுடைய வளர்ச்சி கொஞ்சம மெதுவாகத்தான் நடக்குமாம். அதைத்தவிர அங்கேயிருக்கிற இயற்கை சூழ்நிலை- நல்ல காய்கறிகள்- தயிர் எல்லாம் தான் இதற்குக் காரணம்.

இன்னொரு முக்கிய காரணமும் அவர் ஆய்விலேயிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. தனி மனிதன் நல்லாக நடந்துகொண்டால் மட்டும் போதாதாம். சமூகமுமே நல்ல நெறியில் நடந்து கொள்வதும் ஒருகாரணமாம் அந்த ஊரில் வயதானவர்களுக்கு இளைஞர்கள் மரியாதை கொடுக்கிறார்களாம். கிழம் எப்பொழுது மண்டையைப் போடும் என்று முணுமுணுப்பதில்லை. வேண்டிய உதவிகளைப் பண்ணுகிறார்களாம். இதனால் அங்கு எல்லோருக்குமே மன இறுக்கம் குறைகிறதாம்.

ஒருவர் வீட்டில் ஒருதுக்கம் என்றால் அதை அந்த ஊரில் உள்ள எல்லோரும் வந்து பகிர்ந்து கொள்வார்களாம். அதனால் சோகம் சிதைந்து போகிறது, பொறாமை வருவதற்கும் வாய்ப்பு இல்லை பெரியவர்கள் அனுபவ முதிர்ச்சியால் சரியான வழியைக் காட்டுகிறார்கள். இளைய தலை முறை அந்த வழியிலே போவதனால் கஷ்டங்கள் வருவதில்லை, பெரியவர்களின் பேச்சைக்கேள் என்று சொல்வது எதற்காக? பிரச்சினைகளுக்கு முடிவெடுப்பது அவர்களுக்கு சுலபம், ஏனென்றால் அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. அவர்கள சொல்கிறபடி போய் விட்டால் கஷ்டம் இல்லை, பதகளிப்பு ஏற்படாது, பெரியவர்களுக்கும் தங்களையாரும் மதிப்பதில்லை என்கின்ற கவலையும் ஏற்படாது, அதனால இரண்டு தலைமுறையும் நீண்ட ஆயுளுடன் வாழ முடியும்

இவைகள் வெறும் உபதேசங்கள் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். ஆராய்ச்சியின் முடிவுகள். நீண்டநாட்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு, விஞ்ஞானிகள் சில நல்ல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள், காற்றோட்டமான இடத்தில் இருங்கள். முடிந்தால் திறந்த வெளியிலே தூங்குங்கள் மூச்சை ஆழ்ந்து இழுத்து விடுங்கள், அளவோடு சாப்பிடுங்கள், இறைச்சி, மசாலா சாமான்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். உணவை நன்றாகமென்று சாப்பிடுங்கள், விழுங்கவேண்டாம், வயிற்றில் எதுவும் தங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள், நிற்கிறபொழுது, உட்காரும்பொழுது, நடக்கிறபொழுது, முதுகெலும்பு வளையாமல் நேராகஇருக்க வேண்டும். தினமும் பல் விளக்கி, ஈறுகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் அளவுக்கு மீறிய வேலை செய்யக்கூடாது தினமும் ஏழுமணி நேரமாவது தூங்குங்கள், கோபம், கவலை இரண்டையும் முடிந்தவரை குறைத்துக் கொள்ளுங்கள், இவைதான் விஞ்ஞானிகள் சொல்லுகின்ற யோசனைகள்.

கதையொன்று கேள்விப்பட்டிருப்பீர்கள்! ஒரு பெரியவருக்கு நூறாவது பிறந்த நாள் விழா நடந்ததாம், விழாவுக்கு வந்தவர்கள் எல்லாரும் அவர் நூறுவயது வாழ்வதற்குஎன்ன காரணம் என்று கேட்டார்களாம், அதற்கு அவர் நான் புகை பிடிப்பதில்லை, மது அருந்துவதில்லை. மாமிசம் சாப்பிடுவதில்லை, அவைதான் காரணம் என்றாராம், இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கிற பொழுது தடால் என்று ஒரு சத்தம் மாடியில், என்ன

(3-ம் பக்கம் பார்க்க)

★ கூட்டுப்படைத் தளபதி நியமனம்

# பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன ஜனாதிபதிக்கு ஆலோசனை

(கொழும்பு)

கூட்டுப்படைத் தளபதிகள் சபையின் தலைவரை அமைச்சரவையின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா நியமிக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் ஜனாதிபதி வாசஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே பாதுகாப்பு அமைச்சர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

முப்படைகள் மறுசீரமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுகள் குறித்து ஆராய்வதற்காகவே இக் கூட்டம் கூட்டப்பட்டது.

இக் கூட்டத்தின் போது சிபார்சுக் குழு உறுப்பினர்கள் சமர்ப்பித்த சிபார்சுகள் தொடர்பாக பூரண விளக்கங்கள் அளிக்கப்பட்டது

சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நவீன உலகுக்கு ஏற்ப புதிய யுத்திகளை பயன்படுத்தி முப்படைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என இக் கூட்டத்தில் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, முப்படைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சருக்குமாற்றுவதுதொடர்பான சட்டமூலம்இம்மாதம்பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருப்பதுவும் தெரிந்ததே.

(உ-8)

## பரீட்சைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளின் 2002 ம் ஆண்டுக்கான இறுதிப் பரீட்சைகள் வாய்மொழிப் பரீட்சையும், செயல்முறைப் பரீட்சையும் நவம்பர் 15 ம் திகதியும் எழுத்துப் பரீட்சை டிசம்பர் 15 ம் திகதியும் ஆரம்பமாகின்றன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக்கு முதல்வாரத்தில் பகுதித்தலைவர்களிடமிருந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## 2 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

(மந்திகை)

வன்னியிலிருந்து கால் நடைகளை நெருக்கமாக அடைந்த வாறுயாழ்ப்பாணத்துக்குவாகனத்தில் கொண்டுவந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் தலா இரண்டாயிரம் ரூபாவை தண்டப்பணமாக விதித்துள்ளது.

இவ் இருவரும் முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோதே மேற்கண்ட தண்டனை வழங்கப்பட்டது. (க-23)

## இன்ரர் நெற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சி. ஐ. எம். எ, பரீட்சையினை இலங்கையில் நடாத்த அங்கீகாரம் பெற்ற 'சி. ஐ. எம். எ. இலங்கைப் பிரிவும்' இலங்கை ரெலிகொம்மின் எஸ். எல். ரி வலைப்பின்னலும் இணைந்து நடாத்திய இன்ரர் நெற் தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம்யாழ்ப்பாணக்கல்லூரி வெளிவாரிப்பிரிவுமண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக்கல்லூரிபதில் அதிபர் எ. விமலேந்திரனின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் சி. ஐ. எம். எ நிறைவேற்றுப் பணிப்பாளர் உபாலி ரட்னாயக்கா கலந்துகொண்டார்.

மொறட்டுவ பல்கலைக் கழகத்தை சேர்ந்த கணனித் துறை விரிவுரையாளர் மொகமட் பேட்டேல் இன்ரநெற் தொடர்பாக விரிவுரை நிகழ்த்தினார்.

நூற்றுக்கும் அதிகமானவர்கள் பங்கு பற்றிய இக்கருத்தரங்கில் யாழ்ப்பணத்தில் புதிதாக சி. ஐ. எம் ஏ; கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் பரீட்சைகளையும் யாழ்ப்பாணத்திலேயே நடாத்துவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. (உ-27)

# போதிய மின்சாரம் வழங்கப்படுவதில்லை

## பாவனையாளர் புகார்

(நவக்கிரி)

அச்சுவேலி தெற்கில் உள்ள நாவற்காட்டுப் பகுதிக்கு வழங்கப்படும் மின்சாரத்தினால் எவ்விதபயனும் இல்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவுக்கும் பாவனை அளவுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருப்பதனால் இரவு நேரத்தில் மிகவும் மங்கலான ஒளியில் மின் விளக்குகள் எரிவதாகவும்,

இதனால், ஏக காலத்தில் மின்சாரத்துடன் மண்ணெண்ணெய் விளக்குகளையும் பாவிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, இது விடயம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பல முறை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தட்டிக்கழித்து வருவதாகவும் பாதிக்கப்படும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்விதமிருக்க, இப்பகுதியைச் சூழவுள்ள பகுதிகளுக்கு போதியளவு மின்சாரம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-233)

# உள்ளூராட்சி சபைகளுக்கு புதிய அறிவுறுத்தல்கள்

(கொழும்பு)

சகல உள்ளூராட்சி சபைத் தலைவர்களும், 3 மாதகாலத்திற்கு ஒருமுறை தமது சபைகளினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளில் முதலீடு செய்யப்பட்ட பணம், கிடைத்துள்ள நன்மைகள், எதிர்கால வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு எதிர்கால வேலைத் திட்டங்களிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஒதுக்கீடு செய்யப்படும் பணம் வீண் விரயம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# வறிய பிள்ளைகளுக்கு கல்வி கற்க உதவி

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 1-13 வரை கல்வி கற்கும் தாய், தகப்பன் அற்ற அல்லது தாய் அல்லது தகப்பன் அற்ற வறிய நிலையில் உள்ள பெண் பிள்ளைகளின் கல்விக்குமீசாலை ஸ்ரீ காயத் தி[illegible]பீடம் உதவ முன் வந்துள்ளது;

கிராம சேவையாளரின் உறுதிப் படுத்தலுடன் நேரில் தொடர்புகொள்ளுமாறுபீடம் அறிவித்துள்ளது. (உ-10)

# மாணவரின் திறனை வளர்க்க படைப்பாற்றல் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் மாணவர்களின் ஆவணத் திறனை வளர்க்கும்பொருட்டு மாணவர்களுக்கு இடையில் படைப்பாற்றல் போட்டித் தொடர் ஒன்றினை நடக்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமலராஜ பக்ஷவின் ஆலோசனையின் பேரில் 1ஆம் தரம் முதல் 5ஆம் தரம் வரையும் 6 ஆம்தரம்முதல் 11ம் தரம் வரையும் மற்றும் 12, 13தரங்கள் என மூன்று பிரிவுகளாக இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக பாடசாலை கல்வி அமைச்சின் செயலாளர் எச். எப். சிறிசேனா தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகள் சிறுகதை, செய்யுள், கவிதை நாடகம் அல்லது படைப்பாற்றல் போன்ற துறைகளில் இடம் பெற உள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார்.

(க-07)

## கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் புறபோதனாசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இம்மாதம் நடுப்பகுதியில் வழங்கப்பட உள்ளது. (க)

## சேவைக் கால பயிற்சி

(சுதுமலை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (க-252)

# செயலணிக்குழு குறித்த சரியான விளக்கத்தை அளிக்க வேண்டும்

## அரசைக் கேட்கிறது பொ. ஐ. மு.

(கொழும்பு)

வடக்கிற்கும், கிழக்கிற்கும் தனித்தனியாக செயலணிக் குழுக்கள் அமைக்கப்படுமா? அல்லது இரு மாகாணங்களினையும் இணைத்த ஒருங்கிணைந்த செயலணிக் குழு அமைக்கப்படுமா? என்பது குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும் என, பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வெள்ளிகொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சரத் அமுனுகம மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர்தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்; தற்போது அரசினால்தாய்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடாமல் இருப்பதன் மூலம் வடக்கு-கிழக்கில் தனித்தேசம் ஒன்று உருவாகக்கூடும் என்பது தெளிவாகிறது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும்சமாதானப்பேச்சுவார்த்தைகளின் போது இனப்பிரச்சினைக்கு அடிப்படையாக இருந்த காரணங்கள் எதுவும் கருத்தில்எடுக்கப்படவில்லை.

அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், வடக்கு - கிழக்கில் தனித்தேசம் உருவாகுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,கிழக்குமாகாணத்தில் தமிழ்- முஸ்லிம் மக்கள் கூட்டாக இணைந்து அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான இணக்கம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேணல் கருணா ஆகியோரின் தாய்லாந்து சந்திப்பை அடுத்து ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு தராவிட்டால் ஆயுதம் ஏந்திப் போராட நேரிடும் எனவும்,இடைக்கால நிர்வாக சபையில் பிரதிமுதலமைச்சர் பதவிமுஸ்லிம்களுக்குவழங்கப்பட வேண்டும் எனவும்நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் அதாவுல்ல தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

(உ-8)

## யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி ஊக்குவிப்பிற்கு உடன் நடவடிக்கை

1. தென்னைகளுக்கு உரமிடுவதன் மூலம் பகுதியான மானியம் வழங்கல்
2. தென்னைகளுக்கு இடையில் பொச்சுமட்டைக்குழி அமைத்து ஈரலிப்பினை பாதுகாக்கும் மானியம் வழங்கல்
3. மீள் நடுகைக்கான மானியம் வழங்கல்
4. வீட்டுத்தோட்ட மானியத்திட்டத்தின் கீழ் இலவசமான தென்னங்கன்றுகள் விநியோகம்.
5. தென்னை அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு தேவையான இலவச ஆலோசனைகள் வழங்கல்.

கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் தென்னை மரங்கள் அழிந்த விடயம் யாவரும் அறிந்ததே! அழிந்த தென்னைகளைவிட மீதியாக உள்ள தென்னை மரங்களுக்கும், தென்னங்கன்றுகளுக்கும், மழைகாலம் ஆரம்பமாகி விட்டதனால், செயற்கை, இயற்கை உரங்களை இடுவதன் மூலம் தேங்காய் உற்பத்தியையும்,கன்றினது வளர்ச்சியையும், கூட்டலாம் தென்னை ஒவ்வொரு மாதமும் பூத்து காய்க்கும் நீண்டகாலத் தாவரம் ஆகும். ஒருவர் வீட்டுத் தோட்டத்தில் 3 தென்னைகளை நட்டு பராமரித்து வந்தால் ஐந்து வருடங்களின் பின்பு, தமது குடும்பத்தின் சாப்பாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

3 வருடத்திற்குட்பட்ட தென்னைகளுக்கு ஒருமரத்திற்கு 1கிலோ Y p m இளமாக்கலவை (அமோனியா 500 கிராம் T S p- 200 கிராம், மியூரியற் ஒவ் பொட்டாசு- 300 கிராம்) உரமும், பெரிய காய்க்கும் தென்னைகளுக்கு ஒரு மரத்திற்கு 3Kg A p m முதிர் மரக்கலவை)அமோனியா $1\frac{1}{2}$ கிலோ T.S.p $\frac{1}{4}$Kg மியூரியற் ஒவ் பொட்டாசு $1\frac{1}{4}$kg) இடுதல் வேண்டும்.

இந்த அளவு முறையில் எத்தனை தென்னை மரங்கள் அல்லது கன்றுகள் உள்ளனவோ, அத்தனைக்கும் கமநலசேவை நிலையத்தில் எடுத்த பற்றுச் சீட்டினையும் தோட்டம் உள்ள காணியின் அல்லது தென்னை உள்ள காணி உறுதியின் போட்டோ பிரதியினையும் சமர்ப்பித்து உரமானியத்தினையும் (பகுதி) தென்னைகளுக்கிடையில் பொச்சுமட்டை குழிகளை 2' X4' X3' அளவில் வெட்டுவதன் மூலம் அதற்குரிய மானியக் கொடுப்பனவாக ரூபா2500%உம்பெற்றுக் கொள்ள முடியும் இத்திட்டத்தின் இறுதித் திகதி 31 12 2002 ஆகும். இறுதி நேரத்தினை தவிர்த்து முன்பதாக விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினால் நடை முறைப்படுத்தப்படும் திட்டங்களையும் தேவையான ஆலோசனைகள், விண்ணப்பப்படிவங்களையும் பெறுவதற்கு நல்லூர் கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்கும் தென்னைப்பயிற் செய்கை சபையில் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரனிடம் ஒவ்வொருபுதன்கிழமைகளிலும் அலுவலகநேரத்தில் தொடர்பு கொள்ள முடியும் என அறியத்தந்துள்ளனர்.

## துரையப்பா விளையாட்டரங்கம் பயணிகளின் தங்குமிடமானது

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் தமது தங்குமிடமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கைப் பயன்படுத்திவருவது மீண்டும் அதிகரித்துள்ளது.

மேற்படி விளையாட்டரங்கை தங்குமிடமாகப் பயன்படுத்துவதால் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளுக்கு இடையூறு ஏற்படுவதாக யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரியாழ் .மாநகர சபைக்குச் சுட்டிக்காட்டியதையடுத்து, பயணிகள் பாவனைக்கு இவ்விடம் மறுக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது மாநகரசபையின் கட்டுப்பாடு மீறப்பட்டுவருவதுடன், அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றதாகவும் கூறப்படுகிறது. (உ-6)

## சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர் பணியாளருடன் சந்திப்பு

(நவக்கிரி)

வடக்கு-கிழக்கு சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் நடேசராசா கடந்தவெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு விஜயம் செய்து சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

சமுர்த்தி சிறு குழுக்கள் அமைத்தல், சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் ஆகியன குறித்து கலந்துரையாடினார்.

பின்னர் புத்தூரில் திறக்கப்படவுள்ள சமுர்த்தி வங்கிக் கட்டடத்தையும் பார்வையிட்டார். (உ-233)

### மீள் குடியமர்வு கொடுப்பனவு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுள் முதற்கட்டமாக 350குடும்பங்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக 15ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகளுக்குரிய நிதி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(உ- 77)

## மலையகத்தில் 4ஆயிரம் தொண்டர் ஆசிரியர் விரைவில் நியமனம்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் 4 ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்புஅமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டே இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மலையகத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக நாட்டின் பலபாகங்களிலும் தொண்டர்ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தமையும் தற்போது இவ் ஆசிரிய நியமனங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## 75 சதவீதமான அரச உத்தியோகஸ்தர் இலஞ்சம் பெறுகின்றனர்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகஸ்தர்களில் 75 சத வீதமானோர் இலஞ்சம் பெறுவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டி தர்மராஜாக் கல்லூரியில் நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; சில பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் பொருட்டு அதிபர்கள் இலஞ்சம் வாங்குகின்றனர்

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி செய்த காலத்தில் அரச துறைகள் 10 தொடக்கம் 15 வீதம் வரையான இலஞ்ச ஊழல்களே இடம் பெற்றன;

ஆனால் தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் இது 85 சதவீதமாக வளர்ந்துள்ளது.

தமது கடமைகளை ஒழுங்காக செயலாற்றத் தவறும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யும் உரிமை மாணவர்களுக்கு உண்டு எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது பிள்ளையை கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்ப்பதற்கு இலஞ்சம் கேட்கப்பட்ட காரணத்தால் தனது பிள்ளையை தான் அங்கு சேர்க்கமுடியாது போயுள்ளது என ஜனாதிபதி கூறியதாக அண்மையில் சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தமை தெரிந்ததே, (க-08)

## மரதன், சைக்கிளோட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைகள், கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட ஆண்கள் பெண்களுக்கிடையேயான மரதன, சைக்கிள் ஓட்டப்போட்டி முடிவுகள் வருமாறு;

**மரதன்ஓட்டம்**

பாடசாலை ரீதியாக (ஆண்கள்)

1 ஆம் இடம்:-த. துசன் அத்தியார் இந்துக்கல்லூரி

2 ஆம் இடம்:-க. யதீஸ்வரன் நயினாதீவு ம. வித்தி

3 ஆம் இடம்:-வி. செல்வகுமார் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி

பாடசாலைரீதியாக(பெண்கள்)

1 ஆம் இடம்:-ந. மேகி பிரான்பற்று கலைமகள்வித்தி

2 ஆம் இடம்:-க. எழிலரசி மானிப்பாய் மகளிர் கல்லூரி

3 ஆம் இடம்:-இ. சஜீபா கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கழகரீதியாக (ஆண்கள்)

1 ஆம் இடம:-த. ஜெயந்தன் அளவெட்டி

2 ஆம் இடம்:-ப. ஜயானந்தன் மானிப்பாய்

3 ஆம் இடம்:-ப. ஐயா வேந்தன் மானிப்பாய்

கழகரீதியாக (பெண்கள்)

1 ஆம் இடம்:-சி. சிவரஞ்சினி பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டு கழகம்

2 ஆம் இடம்:- சி.பிறேமினி மல்லாகம்,

3 ஆம் இடம்;-இ. பிரமாலட்சுமி யாழ்ப்பாணம்,

**சைக்கிள் ஓட்டம்**

பாடசாலை ரீதியாக ஆ(ண்கள்)

1 ஆம் இடம்:- ந. டினிஸ்ரன் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,

2 ஆம் இடம்:- சி. சிவயோகம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி,

3 ஆம இடம்:- ந கபிலேஸ் மானிப்பாய் மெமோறியல் ஆங். பாடசாலை.

பாடசாலைரீதியாக (பெண்கள்)

1 ஆம் இடம:-இ.ஜௌரீஸ்வரி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,

2 ஆம் இடம்:- த.சர்மிளா கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி,

3 ஆம் இடம்:-த.சிந்துஜா கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி,

கழகரீதியாக(ஆண்கள்)

1 ஆம் இடம்:-ந ஜெயசுதன் வட்டுக்கோட்டை,

2 ஆம் இடம்:- ம. நிர்மலேஸ்வரன மானிப்பாய்,

3 ஆம் இடம:- தி.கபில்ராஜ் பண்டத்தரிப்பு,

கழகரீதியாக(பெண்கள்)

1 ஆம் இடம்:- இ.பருவநிலா மல்லாகம்,

2 ஆம் இடம்: பே. சிவாஜினி வட்டுக்கோட்டை,

3 ஆம் இடம்:- த. விஜயநதியா குப்பிளான். (க-3)

## இன்று கிரிக்கெற் போட்டி

(யாழ்ப்பாணம்)

தீபாவளியை முன்னிட்டு நீர்வேலி பாரதி விளையாட்டுக் கழகத்திற்கும்,சிறுப்பிட்டி இளங்கதிர் விளையாட்டு கழகத்திற்கும் இடையிலான கிரிக்கெற்போட்டி இன்று முற்பகல் இடம்பெற உள்ளது.

சிறுப்பிட்டி இளங்கதிர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் பெருமளவு கிரிக்கெற் ரசிகர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள உள்ளனர்.

(க)

# ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை அமெரிக்கா தயாரிக்க வேண்டும்

### பென்டகன் ஏவுகணைப் பாதுகாப்பு பிரிவு தெரிவிப்பு

(வாஷிங்டன்)

வட கொரியா, ஈராக், ஈரான், லிபியா ஆகிய நாடுகளில் இருந்து அமெரிக்காவைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களைஅதிகமாகத்தயாரிக்க வேண்டுமென பென்டகன் ஏவுகணைப் பாதுகாப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

ஏவுகணை உற்பத்தியில் இந்நாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன என்றும், வட கொரியா அணு ஆயுத பரிசோதனையை அதிகரித்து வருவதுடன் நெடுந்தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை வைத்திருப்பதாகவும்,

ஈராக்கிடம் இடத்துக்கிடம் நகர்த்தக் கூடிய ஏவுகணைகள் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து மீண்டும் ஒரு மத்திய கிழக்கு யுத்தம் ஆரம்பிக்குமாயின்ஏவுகணைப் பாவனை முக்கிய இடம் வகிக்கும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-3)

# உலக தரிசனம்

### செக்நாட்டில் நடைபெறவுள்ள

# நேட்டோ கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் பாதுகாப்பு தீவிரம்

(பநாக்)

நேட்டோ கூட்டமைப்பின் உச்சி மாநாடு இம்மாதம் 21, 22 ஆம் திகதிகளில்நடைபெறவுள்ளது.

இதனையொட்டி செக் நாட்டின் விமானப்பிராந்தியப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அமெரிக்கா தனது இராணுவ வீரர்களை அங்கு அனுப்பி வைக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இம் மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்டபிள்யுபுஷ் உட்பட 10 இற்குப்மேற்பட்ட நாடுகளின்தலைவர்கள் கலந்து கொள்ள விருப்பதாலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க் வாஷிங்டன் ஆகிய நகரங்களில் கடந்தவருடம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர், நேட்டோவின் முழுமையானதொரு மாநாடு நடைபெற இருப்பது இதுவே யாகும்.

இதேவேளை ஹங்கேரி, போலந்து ஆகிய நாடுகளுடன் செக்குடியரசு 1999ஆம்ஆண்டு நேட்டோ அமைப்பில்சேர்ந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-4)

## ஐவரிக்கோஸ்டில் ஆதரவுப் பேரணி

(அபிட்சான்)

ஐவரிக்கோஸ்ட் அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே ஏற்பட்டுவரும பேச்சுவார்த்தைகளுக்கு அந்நாட்டு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இங்குநடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பினரும் தடுத்து வைத்துள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கான இணக்கம் கண்டுள்ள நிலையை ஆதரிக்கும் முகமாகவே இவ் ஆதரவுப் பேரணி நடைபெற்றுளளது.

இதேவேளை சிறு சிறு விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது என்றும் அரசியல்ரீதியான முடிவுகளுக்கு தீர்வுகாண்பதே நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் என்றும் தீவிரவாதத் தலைவர் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-4)

## பி-2 ரக விமானங்களை அமெரிக்கா நகர்த்தியது!

(வாஷிங்டன்)

ஈராக்குடனான யுத்தம் ஆரம்பிக்கப்படுமாயின் யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்காக பி-2 ரக பாரிய குண்டுவீச்சு விமானங்களை பிரித்தானியாவுக்கும், இந்திய கடல் தீவான டியேகோகாசியாவுக்கும் நகர்த்தியுள்ளதாக அமெரிக்க விமானப்படை தெரிவித்துள்ளது.

இக் குண்டுவீச்சு விமானங்கள 6ஆயிரம் மைல் தூரத்தை தொடர்ந்து பறக்கக் கூடியன.

இவை அதிகளவு குண்டுகளை சுமந்து செல்லக் கூடியவை, குறித்த இலக்கை துல்லியமாக தாக்கக் கூடியது எனவும் விமானங்களுக்குப் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரி தெரிவித்துள்ளார். (க-03)

## இந்தோனேஷியாவில் பூமியதிர்ச்சி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியசுமாத்திரா தீவிற்கருகே ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் இருவர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இப் பூமியதிர்ச்சியின் போது பல வீடுகளும், கட்டடங்களும் சேதமாகியுள்ளன.

இதையடுத்துஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் தங்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அயல் நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, ஜப்பான் டோக்கியோ நகருக்கு 400 மீற்றர் தொலைவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும். இதன் சேத விபரங்கள் பற்றி தெரியவரவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-4)

### புதிய பாராளுமன்றத்தை கூட்டுமாறு

## பாக். ஜனாதிபதி அவசர உத்தரவு

(இஸ்லாமாபாத்)

கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து.புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

### கொலம்பியாவில்

## போதைப் பொருள்கடத்திய இருவருக்கு விடுதலை

(பொஹோடா)

கொலம்பியாவிலுள்ள இரு பிரதானபோதைப் பொருள் கடத்தல் காரர்களானகில்குவா மெகுவா, றொட்றிக் ஆகியஇருவரும் நன்னடத்தை அடிப்படையில்அந்நாட்டு நீதிமன்றத்தினால்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து, கொலம்பிய ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்; நீதிக் துறைக்குள் கடத்தல் காரர்களின் பணம் புகுந்து விட்டது என்றும் தீர்ப்பு வழங்கிய நீதிபதியிணை விசாரணை செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார். (சு-2)

## தமிழ்நாட்டில் கடும் மழை 20 பேர் பலியாகினர்

(சென்னை)

தமிழ்நாட்டில் தொடர்ந்து பெய்துவரும் கடுமையான மழையினால் இதுவரை 20 பேர் பலியானதுடன், 1000 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துமுள்ளனர்.

அத்துடன், பொதுமக்களது சொத்துக்கள் சேதமாகியுள்ளதுடன், பலியானவர்களின் தொகையும் மேலும் அதிகரிக்கலாம என தெரியவந்துள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கத்தாலேயே தமிழ்நாட்டில் தொடர்ந்து கடுமையான மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-4)

### வட்ட மருவில்

## மீண்டும் பயிர் செய்ய முஸ்லிம்களுக்கு அனுமதி

(அம்பாறை)

அக்கரைப் பற்று வட்ட மடுக் காணியில் முஸ்லிம்கள் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை இன்னும் ஒரு சில தினங்களில் பெற்றுத் தருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் பாபா தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

இப் பகுதியில் பயிர் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே (க-10)

### ஆயுத கொள்வனவு தொடர்பாக

## குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இராணுவத்தினருக்கு ஆயுதங்கள் உட்பட பல யுத்த சாதனங்கள கொள்வனவு செய்தது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலும் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிம்பாவேயிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட எம். ஐ 24 ஹெலிகொப்டர்கள் 06 சீ.130 ரக ஷேர் கூரிஸ் விமானங்கள், 120 மில்லி மீற்றர் குண்டுகள் என்பவை தொடர்பாகவே சி. ஐ டியினர் விசாரணை செய்யவுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக ஏற்கனவே விசாரணைகளை நடத்திய குழுவொன்று அதன் விசாரணை அறிக்கையை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது.

இவ்வாயுதக் கொள்வனவு விவகாரத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## 3500 குடும்பங்கள் வன்னியில் குடியமரும்

### அமைச்சர் நூர்தின் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் வன்னிதேர்தல்மாவட்டத்தில் 3500 குடும்பங்கள் அவர்களின் சுயவிருப்பின் பெயரில் குடியமர்த்தப்பட்டுள்ளன. போதிய நிதியுதவி கிடைக்கும் பட்சத்தில் மேலும் ஆறாயிரம் குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த்தப்படுவார்கள்.

இதற்கான நடவடிக்கையினை வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு மேற் கொண்டு வருகின்றது முதற்கட்டத்தில் குடியமர்த்தப்படவுள்ள மூவாயிரத்தி ஐநூறு குடும்பங்களில் மன்னார் மாவட்டத்தில் இரண்டாயிரத்தி ஐநூறு குடும்பங்களையும் முல்லைத்தீவில் 1000 குடும்பங்களையும் வவுனியா மாவட்டத்தில் 500 குடும்பங்களையும் மீள் குடியேற்றப்படும்.

இத்தகவலை வன்னி புனர் வாழ்வமைச்சர் நூர்தின் மசூர் தெரிவித்தார். (க)

## தமிழ் அரசியல் கைதிகளை அமைச்சர் குழு சந்திக்கும்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு யோசப்பும், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறக் கொடவும் இம்மாதம் 18 ஆம் திகதி பார்வையிட உள்ளனர்.

இக் கைதிகளின் விடுதலை மற்றும் கைதிகளின் நலன்கள் குறித்து விரிவாக இவர்கள் கவனம் செலுத்துவர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஏற்கனவே களுத்துறைக்கு சென்று தமிழ் கைதிகளின் உண்ண விரதப் போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வந்த இக்குழுவினர் இது குறித்து தாய்லாந்தில் இடம்பெறும் இரண்டாம் சுற்றுப் பேச்சின் பின்னர் கவனம் செலுத்தப்படும் என உறுதியளித்தமை ஏற்கனவே தெரிந்ததே. (க-10)

## சமாதானகுழுபிரதிநிதிகளால் றோஸ்கார்டன்ஹொட்டலில் பழமரக் கன்று நடுகை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே முதலாவது சுற்று இரண்டாவதுகட்டப் பேச்சுவார்த்தைகள் றோஸ்கார்டன் ஹோட்டலில் நடைபெற்று முடிவடைந்ததை முன்னிட்டு அங்கு பழமரக் கன்றுஒன்று நாட்டப்பட்டுள்ளது.

இப் பழமரக்கன்றினை அரசியலமைப்பு விவகார அமைச்சரும், அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும், தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இலங்கையின் நோர்வே தூதுவர் ஜோன் பெஸ்பேர்க் ஆகிய மூவரு இணைந்தே நட்டியுள்ளனர். (க-08)

சிறுபடையான் செல்லிடம்
சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்

குறள்

# வலம்புரி

## தர்மம்! வெல்லும்

இன்று தீபாவளித் திருநாள் உலகிலுள்ள இந்துக்களால் தெய்வ வழிபாடுகளோடு அனுஷ்டிக்கப்படுகின்ற இத்திருநாளின் மகிமை அற்புதமான புராணக்கதையோடு தொடர்புபட்டது.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களினால் சூழப்பட்ட மனிதன் அசுரவடிவத்தைப் பெற்றுக்கொள்கிறான். நீதி, தர்மம் அகிம்சை, அன்பு, சாந்தி என்பவற்றை இழந்த வடிவமே அசுரவடிவமாகிறது. இவ்வடிவத்திலிருந்து நீங்கி மண்ணில் நல்லவண்ணம் வழக்கூடியதாக மனிதனை உருவாக்கவேண்டுமாயின் அதற்குத் தர்மவடிவினனான பரமாத்மா நம்மை நெருங்கவேண்டும்.

அவ்வாறு உலகப்பரம்பொருள் நம்முள் உறைந்துவிடுமாயின் உலகம் முழுவதும் ஒளி பெறும். ஓர் தீபம் எவ்வாறு தன்னிலிருந்து பல ஆயிரம் தீபங்களைஏற்றி ஒளி பாச்சுகின்றதோ அதேபோன்று மனிதனும், இறைவனும் இரண்டறக் கலக்கின்றபோது அங்கு ஒளிமயம் தோன்றுகின்றது. இத்தகைய தத்துவார்த்தத்தையே தீபாவளித்திருநாள் உணர்த்திநிற்கின்றது.

எனினும் நம்மில்பலர் தீபாவளித் திருநாளின் மகிமையை உணர்ந்து கொள்ளாமல் மதுவிலும், மாமிசத்திலும் அழைந்து தீபத்திருநாளின் புனிதத் தன்மைக்கு மாசுகற்பித்துவிடுகின்றனர்.

இன்று உலகம்முழுவதிலும் கொலைகளும் கொள்ளைகளும், அட்டூழியங்களும் நிறைந்து காணப்படுகின்றது. மனிதன் மனிதனாக வாழாமல் மிருக இயல்பினனாகத் தன்னை வழிப்படுத்திக் கொள்கிறான். இத்தகைய நிலைகள் என்றுஇல்லாது போகிறதோ அன்றுதான் உலகில் அமைதியும், சமாதானமும் நிலைக்கும். எல்லா மக்களும் சமஉரிமையோடு உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமை நீங்கி வாழ முடியும். அதனையே தீபாவளித் திருநாளும் உணர்த்தி நிற்கிறது. இன்றைய நன்னாளில் நாட்டில் அமைதியும், நிரந்தர சமாதானமும் ஏற்பட மனம்நெகிழ்ந்து பிரார்த்திப்போமாக.

# உலக இந்துக்கள் உவகையுடன் கொண்டாடும்

# இன்பத் தீபாவளி இதயத்தில் ஒளியேற்றும் நாள்

'உல்லாசம்பொங்குமின்பத் தீபாவளி ஊரெங்கும் மணக்கும் ஆனந்தம் நமக்கு' இது ஒரு தீபாவளி பற்றிய பாடலின் அழகான வரியாகும் தீபாவளியானது மிகுந்த ஆனந்தமாக குதூகலத்துடன் இந்து மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் இன்பத் தினமாகும். உலகெங்கும் பரந்து வாழும் இந்துப் பெருமக்கள் அனைவரும் இந்தத் தீபாவளி தினத்தை நீராடி புத்தாடையுடுத்தி இறைவழிபாடியற்றி சுற்றத்தாருடன் இனிய பட்சணங்களுண்டு மகிழ்ந்து ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டாடுவார்கள்.

நரகாசுரன் என்ற அசுரனின் இருளென்ற ஆணவமாயை (அறியாமை) அழிந்து அறிவாகிய ஒளி அவனுக்குக் தோன்றிய தினமாகும் இதைத்தான் இந்துப் பெருமக்கள் அனைவரும் தீபாவளியென்ற பெயருடன் பாரம்பரியமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

### வராக அவதாரம்

பகவான் ஸ்ரீ மந்நாராயணன் வராக அவதாரம் எடுத்தபோது பூமிதேவி அவரிடம் மோகங் கொண்டாள். அப்போது தோன்றியவன் தான் நரகாசுரன் தன்மகன் அசுரனாகத் தோன்றிய படியால் அவனுக்கு இறவா வரமருளும்படி பூமாதேவி பகவானை வேண்டினாள்.

'தேவி இவனோ அரக்கற் தன்மை வாய்ந்தவன். ஆகவே இவனுக்கிறவா வரங் கொடுக்க வியலாது உன்கையாலே அவனுக்கு இறப்பைக் கொடுக்கிறேன். நீண்டகாலம் இவன் மரணமின்றி வாழ்ந்து இவன் மடிந்தால் போதும் என்று நீ எப்போது நினைக்கிறாயோ அப்போதே அவனைக் கொல்லும் படியாக விதிக்கிறேன்' என்று பகவான் கூறியருளினார்.

### நரகாசுரன் ஆட்சி

அந்தக்கணமிருந்தே நரகாசுரன் பிராக்ஜோதிஷபுரத்தைத் தலைநகராகக் கொண்டு செருக்குடன் ஆண்டு வந்தான். தேவர்களையும் மானுடர்களையும் அரக்கள் பலவாறு துன்புறுத்தத் தொடங்கினான் தேவர்களும் ஏனையோரும் அவனுக்கு அஞ்சியஞ்சி வாழ்ந்து வந்தனர். பூமிக்கு மழையை வரவிடாமல் வருணனின் குடையைக் கவர்ந்தான். அமுதம் வழங்கும் அதிதியின் கவச குண்டலங்களையும் கவர்ந்து சென்றான்.

**மாருதி**
**ஆவரங்கால்**

துவாபாரயுகம் ஆரம்பமாகியது ஸ்ரீ மந்நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணராக அவதரித்து துவாரகாபுரியில் இருந்தார். பூமி தேவியின் அம்சமாக சத்தியபாமாவும் அவதரித்திருந்தார்.

அசுரமன்னனின் கொடுமையைத் தாங்க மாட்டாத தேவர்கள் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று தம்மைக்காப்பாற்றும்படிவேண்டிக் கொண்டனர்!

கிருஷ்ணபகவானும் கருடன் மீதேறிசத்தியபாமாவையும் தன்னோடு அழைத்துக் கொண்டு நரகனது பட்டணத்திற்குச் சென்று போருக்குச் சங்கநாதம் செய்தார். தன்னையெதிர்க்க ஒருவன் வந்துள்ளான் என்பதையுணர்ந்த நரகாசுரன் பற்பல வீரர்களுடன் போர்க்களம் வந்தான்.

### போர் நடந்தது

கிருஷ்ணருமபற்பல அஸ்திரங்களை எய்து வீரர்களனைவரையும் சிதறடித்தார். அசுரன் கோபமடைந்து கதையாலும் சூலத்தாலும் பகவானைத்தாக்கினான். மாயையால் நாலா திசைகளிலுமிருந்து அஸ்திரங்களை வந்து விழும்படியாகச் செய்தான். பகவானும் அசுரனுடைய அனைத்து அஸ்திரங்களையும் அழித்து அவனைப்பலமாக ஆயுதங்களால் தாக்கிய போதும் நரகனைக் கொல்ல முடியவில்லை.

தன்னெதிரிலேயே பகவானைப் படைவதை சத்தியபாமையினால் பார்த்துச் சகிக்க முடியவில்லை சுவாமி களைத்து விட்டீர்களே' என்று பகவானைக் கேட்டாள்.

'பிரியே! என்னால் நரகனுக்கு மரணம்இல்லைநீதான் அவனை வதைக்க வேண்டும்' என்றார் பகவான்.

அடுத்த கணம்சத்தியபாமையும் வில்லையெடுத்து நாணேற்றி பகவானைத்துதித்து அஸ்திரத்தைஎய்தாள்.

நொடிப் பொழுதினில் அஸ்திரம் நரகனது மார்பைத் தாக்கியது. அவனும் குற்றுயிராக நிலத்திலே வீழ்ந்தான். தேவர்கள் மலர்மாரிபொழிந்தனர்.

### தீபாவளி

நரகன் இறுதி நேரத்திலே பகவானை யுணர்ந்து கொண்டான். இருகரங்களையும் கூப்பி பகவானை வணங்கினான். 'பிரபோ அறியாமை என்ற இருள் இப்போது என்னைவிட்டகன்று விட்டது. தங்களின் திவ்வியதரிசனத்தாலும், தேவியின்திருக்கரத்தால் அடிபட்டதாலும் எனக்கு இனி பிறவி என்பதே கிடையாது; என்மரணத்தையிட்டு யாரும் வருந்தவேண்டாம் 'இந்த நன்னாளை எல்லாரும் மகிழ்ந்து கொண்டாட வேண்டும். என் ஆசை இது ஒன்றுதான்இதைநிறைவேற்றஅனுக்கிரகிக்க வேண்டும்' என்று பகவானைப் பிரார்த்தித்தான்.

பகவானும் அவனுக்கு அனுக்கிரகம் செய்தார் அன்று முதலே பூலோகத்தில் அன்னவரும் அந்நாளை 'தீபாவளி' யாகக் கொண்டாடிவருகிறார்கள்.

### ஆசீர்வாதம்

பகவானைப் பார்த்தபடியே நரகன் உயிரை விட்டான். அவன் ஆவி ஒளி ரூபமாய் பகவானை நெருங்கி வலம்வந்து அவரோடு ஐக்கியமாயிற்று. அப்போது பூமாதேவி நரகனுடைய புத்திரன் பகதத்தனை அழைத்து வந்து பகவானை நமஸ்கரிக்கச் செய்தாள்.

'பிரபோ இவன் நரகாசுரனின் மைந்தன் இவனைத் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்' என்றார்.

பகவானும் அவனை ஆசீர்வதித்து பிராக்ஜோதிஷ புரத்திற்கு அரசானாக முடிசூட்டி வைத்தார்.

எனவே இந்துத் தமிழ்பெருமக்களாகிய நாமும் இன்றைய தினத்தில் நரகசதுர்த்தசிஸ்நானம்செய்துகோடியுடுத்தி பகவானைத் துதித்துகுடும்பத்தினருடனும் சுற்றத்தாருடனும் இணைந்து பட்சணங்களுண்டு வாழ்த்தி மகிழ்ந்து கொண்டாடுவோமாக!

'உலகோரனைவர்க்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!'

'சர்வே ஜநாகா சுகினோ பவந்து!'

# தமிழ் வெளியீடுகளின் ஆவணத் தொகுப்பு

# இல்லாமை பெரும் துர்அதிர்ஷ்டமே

## நூல் தேட்டம் அமைப்பின் பொறுப்பாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

உலகில் தமிழ் வெளியீடுகள் பற்றிய ஆவணத் தொகுப்புகள் எங்கும் இல்லாமை துர்அதிர்ஷ்டமாகும். இப் பெரும் குறையைப் போக்கும் ஒரு பெரு முயற்சியாகவே 'நூல் தேட்டம்' முதல் தொகுதியாகும். இந்த வகையில் 7 ஆயிரம் நூல்கள் கொண்ட ஆவணத் தொகுப்பை வெளியிடுவதை எனது லட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றேன்.

இவ்வாறு, லண்டனில் இயக்குகின்ற ''நூல் தேட்டம்'' அமைப்பின் பொறுப்பாளரான என். செல்வராசா நேற்றையதினம்நல்லை ஆதீன கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற இலக்கியப் படைப்பாளிகளுடனான கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

யாழ் மாநகர சபையின் பொது நூலகர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

உலகில் தமிழ் நூல் வெளியீடுகள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரியப்படுத்தும் வகையில் ஆவணப்படுத்தல் திட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும். 1989 ஆம் ஆண்டு கொழும்பில் இடம் பெற்ற தேசிய நூலகம் நடாத்திய நூல்கள் கண்காட்சியில் தமிழ் நூல்கள் பற்றிய தகவல்கள் இல்லாமல் இருந்தமையே என்னை இப் பணியில் ஈடுபடவைத்தது. இப் பணி மிகவும்கஷ்டமான பணியாகும். இருப்பினும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு ஆற்ற வேண்டிய பணி என்ற ரீதியில் செய்து வருகின்றேன்.

இதே வேளை லண்டனில் யாழ்ப்பாணத்துப் படைப்பாளிகளின் நூல்களுக்கு நல்ல மதிப்பும், கௌரவமும் கிடைத்து வருகின்றது என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில், முது பெரும் எழுத்தாளர் கலாநிதி சொக்கன், செங்கை ஆழியான் உட்பட வேறும் பலர் கருத்துரைகள் வழங்கினர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (க-77)

## தினசரி தியானம்

### பணிவு

அகந்தை, இறுமாப்பு, மற்றும் சோம்பலை அகற்றுங்கள். பணிவைப்பெருமளவு வளர்த்துக் கொள்ளுங்கள். தற்காலத்தில் மக்கள் அதிகமாகப் பேசுகிறார்கள். அவர்கள் செயலாற்றுவது மிகவும் குறைவு. தங்களைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டு பெரிய விஷயங்களைப் பற்றியெல்லாம் நிறையப் பேசுகிறார்கள். செயல் என்று வரும் போது பயனற்றவர்களாக இருக்கிறார்கள். உண்மையாக இருங்கள். புல்லைப் போலப் பணிவாக இருங்கள்.

சுவாமி சிவானந்தர்

## மூதாட்டியின் சங்கிலி இளைஞரால் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு இளந்தாரி கோவிலடியில் ஆலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்த மூதாட்டியின் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நண்பகல் 12 .00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் மூதாட்டியின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டனர் என தெரியவருகின்றது. (க-07)

# சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்பு பாலசிங்கத்திற்கும் எமக்கும் உண்டு

## கூட்டணித் தலைவர் சங்கரி பி.பி.ஸிக்குப் பேட்டி

(லண்டன்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பாமல் இருக்க கூடிய தார்மீகக்கடமை தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் எமக்கும் உண்டு என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ் மாவட்ட எம்.பியுமான வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் பின் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பி.பி.ஸிக்குவழங்கிய கருத்துத் தொடர்பாக கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் பி.பி.ஸி நிருபர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேலும தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு கிழக்கில் பிற அரசியல கட்சிகள் அரசியலில் ஈடுபடலாம என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஆனால் ஆயுதம் தாங்கியிருக்கின்ற ஏனைய இயக்கங்கள் ஆயுதத்துடன் நடமாடமுடியாது. ஆயுதங்களை கைவிட்டுவிட்டோம் என்று அவர்கள் கூறினாலும் அது பற்றி விடுதலைப்புலிகள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தோம் மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதியும் இதுதான்.

எது எப்படி இருப்பினும் மக்களினதும் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பு இனப்பிரச்சினை தீர்வுக் குத் தேவை. இது இல்லாது போனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பாழடிக்கப்பட்டுவிடும் என்றும் ஆனநதசங்கரி தெரிவித்தார். (வ)

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

புதிய கனன் போட்டோக் கொப்பி மெசின்

அறிமுகப்படுத்தப்படுகிறது

NP 7161- விலை 167,000/- + VAT + TAX

NP1215- விலை 155,000/- VAT + TAX உட்பட

பாவித்த சகலவிதமான போட்டோக் கொப்பி மெஷின் ஆகக்கூடிய விலை 40,000/-ற்கும் ஆகக் குறைந்தது 10,000/- ற்கும் எங்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன் இதன் பெறுமதிக்கேற்ப புதிய மெஷின் (NP 7161) விலை கழிக்கப்படும்

Canon NP 7161

நவகலா

Metro PolitonAgent 200, K.K.S. Road, யாழ்ப்பாணம்.


### மக்கள் தமது..

கேட்கப்பட்ட மற்றொரு கேளவிக்கு அவர் பதிலளிக்கையில் பிரதான தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து, ஆலோசித்து செய்றபடுகிறார்கள். எம் மைப் பொறுத்தளவில் தமிழ் மக் களின் பிரச்சினைகள் தொடர் பாக பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் களை கேட்டுள்ளோம்.

தமிழ்க் கட்சிகள் தனித்துவமாக இருந்தாலும், தேசிய ரீதி யான போராட்டத்தில் அக்கட்சி கள புலிகளோடு ஒன்றிணைந்த ஓர் அங்கமாகவே கொண்டுள் ளோம்.

தமிழ்க் கட்சிகளின் எதிர்கா லம் எமது மக்களின் கைகளிலே யே தங்கியுள்ளது. எந்தக் கட்சி யும், எந்த இயக்கமும் மக்களுக்கு விரோதமாக செயற்பட்டால், மக் களாலேயே அவர்கள் வெளியேறப் படுவார்கள் என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித் துள்ளார். (ம)


வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை வைத்திய கலாநிதி

சி.இராசரத்தினம்

121,2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 2222459


### பூமியை நோக்கி..

கருத்தையும் கூறவில்லை. ஆனால அது வழுவதால்ஒரு அதிர்வு இருக்கும் என்று கூறினார்.

2001ஆம் ஆண்டு ஜனவரி யில் குஜராத், பங்களாதேஷ் பகுதி களில் பூமியதிர்ச்சி ஏற்படுமெ ன்றும் அது நடைபெற்று சில மாதங்களில் ஈராகவில் நில நடுக் கம் ஏற்படுமென்றும் இவர் எதிர்வு கூறியிருந்தார். இரத்தினக்கல் துறையில் நீண்டகாலம் ஆய்வாளராக இருந்த இவர் இயற்கைப பேரழிவுகள் தொடர்பாக பல ஆய்வுகள் செய்துள்ளார்.

இதேவேளை அடுத்த ஆண்டு ஒரு நில நடுக்கம் ஏற்படுமென்றும் அது கொழும்பு கொட்டாஞ்சேனை, காலிமுகம், மொறட்டுவ என்ற முக்கோணத்தினுள் நிகழலாம என்று தான் சந்தேகிப்பதாகவும் விஜயவர்த்தன இப்பொழுது எதிர்வு கூறியுள்ளார். இது தொடர்பாக வளிமண்டல ஆய்வுத்திணைக் கள அதிகாரிகளைக் கேட்ட போது அவர்கள் இது பற்றிக் கருத்துக் கூற மறுத்துவிட்டனர். (இ)

### வரவு செலவுத்....

தமது கோரிக்கைக்கு பிரதமர் உரிய பதிலைத் தரும் வரையில் தாய்லாந்துப் பேச்சுக்களில் இருந்து விலகியிருக்குமாறு நிபந் தனை விதித்தனர்.

இதனாலேயே ஹக்கீமின் தாயலாந்துப் பயணம் தாமதித்திருந் தமையும் தெரிந்ததே. (இ)

### இலங்கைக் கடற்..

தொடரும் நிலையில் கடற் படையினருக்கு விஷேட பயிற்சி அவசியமா என்று கேட்டதற்கு,

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் நடவடிக்கையில் கடற்படையினர் முக்கிய பங்கை வகிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (இ)

### மூன்றாம் கட்டப்..

நிதியுதவி வழங்கும் நாடுகளுக்கு சென்று நிதியுதவி பெறும் வழிவகைகள் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இதேவேளை 4ம் கட்டப் பேச்சுவார்த்தைகள் அடுத்தவருடம் ஜனவரி 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை பேச்சுக்களை முடித்துக் கொண்ட அரச பிரதிநிதிகள் இன்று நாடு திரும்புவர். (த)

### தாய்லாந்துப்.....

தாய்லாந்துப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இச் செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், நான்கு நாட் களாக நடைபெற்ற பேச்சுவார்த்தை யின் போது அரசின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிரு த்தி, புனரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக இரு தரப்புப் பிரதி நிதிகளும் இணைந்து குழுக்கள் அமைத்தமை பேச்சுவார்த்தையில கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.

இப் பேச்சுவார்த்தைக்கு எந்த விதமான வெளி அழுத்தங்களும் இருக்கவில்லை. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இரு சாராரும் இணக்கம் காணபபட்ட விடயங் கள் குறித்து சர்வதேச நாடுக ளுக்கும் தெரியப்படுத்தப்பட வுள்ளது. என்றும் இருவரும் தெரிவித்தனர்.

இதேவேளை இப் பேச்சுவார் ததை தொடர்பாக நோர்வே தூதரகம் வெளியிட்ட அறிக்கை ஒன் றில் நீண்ட காலம இருந்து வந்த பிரச்சினைகள் ஆராயப்பட்டதா கவும், இதன் மூலம் அரசும விடு தலைப் புலிகளும் நிரந்தரமான அரசியற் தீர்வை நோக்கி சென றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம)


அகிலமெங்கும் அமைதி நிலவ அனைவர்க்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்குகள்



மாணவர் மலர்ச்சிக் கணக்கினை ஆரம்பித்து சேமிக்கும் போது, சேமிப்பு பெருகி, வட்டியும் கிடைப்பதுடன் வேறும் பல நன்மைகள் கிடைக்கின்றன.

**நிபந்தனை:-** ரூபா **5000/-** அல்லது அதற்கு மேற்பட்ட மீதியுடன் மூன்று மாதங்கள் ஒரு மாணவரால் இக் கணக்கு பேணப்பட்டால் அக் கணக்குடைமையாளரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் காப்புறுதிக்கு அருகதையுடையவராகின்றனர்.

**வயதெல்லை:-** பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு 18 - 60 வயது வரை மாணவருக்கு 18 வயதுவரை

**பாதுகாவலரின் காப்புறுதித் தொகை:**

ஆயுட் காப்புறுதியாக கணக்கு மீதியின் பத்து மடங்கு வழங்கப்படும். (ஆகக் கூடிய தொகை ரூபா **500,000/=** மட்டும்)

விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனத்திற்கான காப்புறுதியாக கணக்கு மீதியின் ஐந்து மடங்கு தொகை வழங்கப்படும்(ஆகக் கூடியதொகை ரூபா 2,50,000/= மட்டும்)

**மாணவருக்கான நன்மைகள்:**

கணக்குடைமையாளர் நோயுற்று வைத்திய சாலையில் 2 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டிந்தால் நாளொன்றுக்கு ரூபா 100/=கொடுக்கப்படும்.(வருடத்தில் 30 நாட்களுக்கு மட்டும்)

அதி தீவிர சிகிச்சை பிரிவில் அந்த மாணவர் அனுமதிக்கப்பட்டிருந்தால் நாளொன்றுக்கு ரூபா 200/= வீதம் கொடுக்கப்படும். (வருடத்தில் 30 நாட்களுக்கு மட்டும்)

அபாயகரமான நோய்க்கான காப்புறுதியாக கணக்கு மீதியின் ஐந்து மடங்கு தரப்படும். (ஆகக் கூடியதொகை ரூபா 2,50,000/= மட்டும்)

ஒரு பிள்ளையின் ஒரு கணக்கிற்கு மட்டுமே இச் சலுகைகளுண்டு.

**பரிசுகள்**

கணக்கின் மீதி ரூபா 500/=,ரூபா1000/=, ரூபா2500/=, ரூபா 5000/=, ரூபா 10,000/=, ரூபா 25000/= என அதிகரிக்கப் பல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

அருகிலுள்ள மக்கள் வங்கியில் ஒவ்வொருவரும் மாணவர் மலர்ச்சிக் கணக்கை உடனடியாக ஆரம்பியுங்கள். உங்கள் வருங்காலத்திற்காக இப்பொழுதே சேமிக்கத் தொடங்குங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி




சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமானநல்லெண்ணெய்

V.S.P லஞ் ஒயில்


தயாரிப்பாளர்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# வலம்புரியின்
# தீபாவளி சிறப்பு மலர் - 2002



## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி வழங்கிய ஆசிச்செய்தி

தீபாவளி பண்டிகையான இந் நன்னாளில் வலம்புரிப் பத்திரிகைக்கு ஆசிச்செய்திகள் வழங்குவதில் முதலில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துக்களின் சிறப்பான பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி வருடந்தோறும் ஆன்மீக சிந்தனையோடும், மனநிறைவுடனும், இறை நம்பிக்கையுடனும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தீபாவளி என்பது தீபங்களின் வரிசை என்றே நேரடியாகக் கருதப்படும். அத்துடன் புராண ஐதீகக் கதையோடும் தொடர்புடையதாக இருக்கின்றது.

எமது பிரகாசமான வாழ்வுக்கும் இறை நம்பிக்கையின் தளராத உறுதிக்கும் சிறப்பான நாளான இத் தீபாவளித் தினத்தில் மக்கள் எல்லோரும் இறை வழிபாடும் பிரார்த்தனையும் செய்வது முக்கியமானது. மக்கள் எல்லோருக்கும் நீண்ட ஆயுளும், திடகாத்திரமும் இறை அருளும் கிடைப்பதோடு, நாட்டிலே ஸ்திரமான சமாதானம், சுபீட்சம், சாந்தி கிடைக்கவும் வேண்டுமென இறைவனை வேண்டி ஆசிகள் பல கூறுகின்றேன்.

''ஸர்வே ஜனா: சுஹினோ பவந்து.''

சிவஸ்ரீ. ஜ. மஹேஸ்வரக்குருக்கள்

## புனர்வாழ்வு, அமைச்சரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

எமது நாட்டில் கடந்த இரண்டு தசாப்தங்களாக மக்கள் அனுபவித்து வந்த துன்பங்கள்துயரங்கள் எல்லாம் மறைந்து ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் தமிழ் மக்கள் கொண்டாடுகின்ற தலைத்தீபாவளியாக இந்த தீபாவளி அமைவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தாய்லாந்து நாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நல்லெண்ண சூழ்நிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இக்கால கட்டத்தில் வரும் இப்புனிதமான தீபாவளிதினத்தில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து எமது தாய்நாட்டின் சுபீட்சத்திற்காக வருங்கால சந்ததியினரின் வளமான வாழ்வுக்காக பிரார்த்திப்போம்.

அதர்மம் அழிந்து தர்மம் நிலை நாட்டப்பட்டதை நினைவு கூரும் இத்தீபாவளி தினம் நம் எல்லோருக்கும் ஒரு நல்ல செய்தியினைச் சொல்ல வருகின்றது. நாம் அனைவரும் புரிந்துணர்வுடனும் நல்லெண்ணத்துடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட்டு எமது நாட்டை பாதுகாப்போம்.

தீபாவளி தினத்தைக் கொண்டாடுகின்ற இந்துக்கள் எதிர்காலத்தில் நிரந்தர சமாதானத்துடனும், சுபீட்சத்துடனும் வாழ எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன
புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும்
அகதிகள் விவகாரங்கள் அமைச்சர்

## யாழ். அரசாங்க அதிபரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

கடந்த மூன்று வருட காலமாக யாழ். மாவட்டத்தில் பத்திரிகைத் துறையில் முன்னணி வகித்துவரும் வலம்புரிப் பத்திரிகை தமிழ் மக்களின் கலாசார நினைவாக நடைபெறுகின்ற தீபாவளிப் பெருநாளிலே, இப் பெருநாளை முன்னிட்டு விசேட சமர்ப்பணம் ஒன்றை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நீண்டகால போரியல் நடவடிக்கைகளின் பின் அதன் பாதிப்புக்களில் இருந்து மக்கள் மீண்டும் தமது கலை கலாசார, சமூக விழுமியங்களை இங்கு கட்டியெழுப்பும் இச் சந்தர்ப்பத்திலே 2002 ம் ஆண்டு தீபாவளிப் பெருநாள் அவர்களது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தும் ஒரு கலாசாரப் பெருநாளாக விளங்குகிறது.

எனவே இந் நாளில் தமது குடும்ப அங்கத்தவர்களுடனும், சுற்றத்தாருடனும், வெளிநாட்டில் இருக்கின்ற தமது சுற்றத்தாருடனும் தமது கருத்துக்களை பரிமாறி விழா எடுக்கும் மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

யாழ் செயலகம், செ. பத்மநாதன்,
யாழ். மாவட்டம். அரசாங்க அதிபர்,

## பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி

அதர்மம் அழிவதும் தர்மம் மேலோங்குவதுமே உலக நியதி என்பதை தீபாவளித்திருநாள் உணர்த்தி நிற்கிறது எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற உயர்ந்த பண்புடமை கொண்ட இந்து மதம் தர்மக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டது.

தர்மத்தை நிலைநாட்டக்கூடிய வகையில் ஒவ்வொரு இந்து சமயத்தவனும் தனது வாழ்வை ஒழுங்கு படுத்த வேண்டும். அதர்ம வழி அழிவிற்குரியது தர்மம் உலகைக் காப்பது இந்த உண்மையை உணர்த்துகின்ற இன்றைய தீபாவளித்திருநாளில் நாட்டில் அமைதியும், சமாதானமும் கிடைக்க அனைவரும் கூட்டாக பிரார்த்திப்போமாக.

சுவாமி. சித்ரூபானந்தா
சாரதா சேவாச்சிரமம்,
,பருத்தித்துறை.

### கண்ணா!
### நீ அருள வேண்டும்

கண்ணா!
மேக வண்ணா!
சமாதானப் புறாக்கள்
சிறகடித்துக் கொள்ள
நரகாசுரனுக்கு
நீ அருள் சொரிந்த
தீபாவளித் திருநாள்
வந்து நிற்கிறது
வெந்த நிலத்தை
அரையும் குறையுமாய்
சீராக்கி விட்டு
வரிசை வரிசையாய்
தீபங்களேற்றியே
கரங்கள் கூப்பி நிற்கிறோம்
உன் அருள் மழைக்காய்!
கண்ணா! சமாதானப் புறாக்கள்
நிரந்தரமாய் உலாவிட
நீ அருள வேண்டும்.

மீசாலையூர் கமலா

### நேயம் காத்திடுவோம்.

தீபாவளி எனும் திரு நாளிலே.
ஒளியினை ஏற்றி இருளினை
அகற்றி
ஒளி பெற்று உயர்ந்திடுவோம்
தெளிவிதை உணர்ந்து
தெய்வம் தொழுது
சமாதான வாழ்வைப் பெற்றிடுவோம்
அன்பைப் பேணி ஆணவம்
நீக்கி
மனிதநேயம் கார்த்திடவே
தீபங்கள் ஏற்றி மகிழ்ந்திடுவோம்

சமூகஜோதி
கா. கணேசதாசன்.

## மனங்களில் ஒளியேற்றட்டும் மாநகரசபை ஆணையாளர் வாழ்த்து

தீபத்திருநாளாம் இன்று நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு, மக்களின் மனங்களிலே உவகை பொங்க வேண்டும்.

இலங்கைத்தீவில் அமைதியை ஏற்படுத்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியடையட்டும்.

மனித நேயம், காருண்யம், பரோபகாரம் மனித உள்ளங்களில் பரவி ஒளியேற்றும் திருநாளாம் இன்று அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் உருவாகி அமைதி சமாதானத்துடன் அனைவரது வாழ்வும் தித்திக்க இறையாசி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

யாழ் மாநகர சபை இ. இராமலிங்கம்
யாழ்ப்பாணம் ஆணையாளர்

### இந்நாள்,
### என்றும் வாழி!

வானங்கள் பூமழை பொழியட்டும்-இந்த
வையத்தை வாழ்த்தியே வணங்கட்டும்
கானங்கள் காதிலே ஒலிக்கட்டும்- புது
கவியாக எங்கெங்கும் இனிக்கட்டும்
மனங்களும் திருந்தியே வாழட்டும்-அவை
மலர்களாய் வாசத்தை ஆளட்டும்
துன்பங்கள் அடியோடு சாயட்டும்- தினம்
துலக்கமாய் இன்பங்கள் சேரட்டும்.
சாந்தமாய் தீபங்கள் ஜொலிக்கட்டும்-இந்த
சமாதானம் என்றென்றும் நிலைக்கட்டும்.

இ. விஜயகுமன்
அல்வைய,ர்.

### ''இனித்திடும் இன்பத் தீபாவளி''

இல்லறத்தில் நல்லறமாய்த் திகழ -எங்கும்
இன்பமாயொளிர்ந்திடு தீபாவளியே!
சொல்லிடும் சோதனைகள் நீங்கிட-எம்
சொந்தங்கள் சேர்ந்திட்டு வா தீபாவளியே!
தொல்லையெல்லாந் தொலைந்திடத் தொழுதிடும்-
எங்கள்
தேசம் சொர்க்கமாகிடவே வந்திடு
தீபாவளியே!
செல்வங்கள் செழித்து சிறப்புற்று வாழ -நல்ல
சேதிகொண்டு சிறகடித்து வருவாய்
தீபாளியே!

என் .பிறேமசீலன்
கோண்டாவில்

### இன்பத் தீபாவளி

இன்பங்கள் பொங்க
மங்களம் செழிக்க
இத்தினம் இனிக்க
புத்தாடை உடுக்க
புதிய வாழ்வை அமைக்க
சுக வாழ்வு கிடைக்க
இனிதே வந்திடுவாய்
இன்பத் தீபாவளி நீ

s. s. இளையநிலா
மிருசுவில் வடக்கு

## ஊடகப்பணிப்பாளரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

இன்றைய தீபாவளி தினம் கடந்த இருபது ஆண்டு காலப்பகுதியில் நாம் காண்கின்ற இன்பகரமான தீபாவளியாகும். இலங்கை மண்ணில் சமாதானம் தோன்றியிருக்கின்ற சூழலில் தமிழ் மக்கள்தலைத் தீபாவளியாக கொண்டாடுவதையிட்டு உலகெங்கும் வாழ்கின்ற எட்டு கோடி தமிழர்கள்நிம்மதிப் பெரு மூச்சோடு இலங்கை மக்களை எண்ணிப் பார்ப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வழமையாக மலைநாட்டில் மட்டும் தீபாவளி களைகட்டும். இத்தடவை வடக்கு கிழக்கு மக்கள் உற்சாகத்தோடு உறவுகளோடு ஒன்றாக கலந்து மகிழ்கின்றார்கள். இந்த நிலைமை தொடரவேண்டும். இப்போதும் கூட வாழ்க்கை செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக வசதிகள் இல்லாது தவிப்பவர்களையும்,அகதி முகாங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்களாக இல்லாமல் நாம் எம்மால் இயன்ற உதவிகளை வாரி வழங்கி மகிழ்வோமாக. நாம் ஒன்றுபட வேண்டிய காலம் எம்மை நெருங்கிவிட்டது அதர்மம் அழிந்து தர்மம் தழைத் தோங்கிய இன்றைய நன்நாளில் அரசு புலிகளுககிடையிலான சமாதான முன்னெடுப்புகள் வெற்றியடைய அனைவரும் ஒரே தினத்தில் ஒரே எண்ணத்தோடு மகிழ்ச்சியினை பகிர்ந்து கொள்ள இன்றைய தினம் ஒரு சுபீட்சம் மிக்க ஒளிமயமான நாளாக அமையட்டும்.

எம்.எஸ்.சதீஷ்குமார்,ஜே.பி. எம்.ஏ
ஊடகப் பணிப்பாளர்.

### மானுடம் காத்திட வேண்டுமெடி!

பண்பை வளர்த்திடும் தீபாவளி- அது
பாதகம் கொன்றிடும் தீபாவளி
மண்ணில் மலர்ந்திடும் தீபாவளி-
வல்ல
மானுடம் காத்திட வேண்டுமெடி!

அன்பை அளித்திடும்தீபாவளி-என்று
ஆனந்த மீந்திடும் தீபாவளி
துன்பம் துடைத்திடும் தீபாவளி- நீ
தூய்மை துலக்கிட வேண்டுமெடி!

கடமை உணர்த்திடும் தீபாவளி-அது
கயமை அழித்திடும் தீபாவளி
மடமை கொளுத்திடும் தீபாவளி- அதை
மாநிலம் கொண்டாட வேண்டுமெடி!

கூத்தாடி







# தீபாவளி சிறப்பு மலர்




அன்பு நெஞ்சங்கள் அனைவர்க்கும்
எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகு நிறைந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்
- முகப் பொலிவுக்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ளவும்



**எரிக்கணேஸ்**

564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



வாழ்வின் இனிய நாளாம் தீபத்திருநாள்
வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி
அடைகின்றோம்

அசல் 22 கரட் தங்க நகைகளை மனநிறைவுடன்
சிறப்பாகப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்



**உதய கதிரவன் நகை மாடம்**

172, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

**கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்**

213, கஸ்தூரியார் [C/5307] யாழ்ப்பாணம்.



துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட
இன்றைய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்

- நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளா?
- நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளா?
- அசல் 22 கரட் தங்க நகைகளா?



உங்கள் கனவை
நனவாக்க
இன்றே விரையுங்கள்

**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone - 021 - 2222694

[C/5308]



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளித்
திருநாள் நல்வாழ்த்துக்கள்

புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா?
மோட்டார் வாகனங்களா?

அவற்றிற்கான உதிரிப்பாகங்களா?
பற்றறி வகைகளா?

அனைத்தையும் ஓரிடத்தில் நிதான விலையில் பெற்றிட



**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் மெயின் வீதி, சங்கானை

**அருள் விநாயகர் றேடர்ஸ்**

106, ஸ்ரான்லி வீதி [C/5309] யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் எமது தீபாவளித் திருநாள் நல் வாழ்த்துக்கள்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான - சுவையான
ஐஸ்கிறீம் வகைகளுக்கு யாழ் நகரில் ஓர் குளிர் அருவி



**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

19, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் யாவர்க்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் தரம் மிக்க
தங்க நகைகளைப் பெற்றிட

**அபிநயா ஜுவல்லறி**



32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




# தீபாவளி சிறப்பு மலர்



தமது, அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

## பாலா வீடியோ



உங்கள் வாழ்வின் மறக்க முடியாத மங்கள
நிகழ்வுகளை அதி நவீன Digital computer
mixing மூலம் வீடியோ படம் பிடித்திடவும்
வெளிப்புற கலர் புகைப்படம் பிடித்திடவும்
சமகாலத்தில் தமக்கென ஓர்
தனியிடத்தைப் பெற்றுக் கொண்டவர்கள்

## BALA VIDEO

தில்லையம்பதி,
கோண்டாவில்.

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

[C/5316]

எம் இனிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும்
தித்திக்கும், தேன் சொட்டும் தீபாவளி வாழ்த்துக்கள்



## சாருணி ஜுவல் கட்டிங் வேக்





உரிமையாளர்: பா.கேதீஸ்வரன்

இல.75, கன்னாதிட்டிச் சந்தி, T.Phone: 021 -222 3502 யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம
எம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் தங்க நகைகளை எழில் மிகு வடிவத்தில் செய்து பெற்றிட வாரீர்



## GEETHA JEWELL HOUSE

மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்

## கீதா ஆபரண மாளிகை





கே.கே.எஸ்.றோட் குளப்பிட்டிச் சந்தி கொக்குவில்.

Note: வெகுவிரைவில் எமது ஸ்தாபனம் இல:12 நவீனசந்தை சாவகச்சேரியில் (பழைய இடத்தில்) இயங்கவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். [C/5313]

அறிமுகம்
அம்பிசன்





RG

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## இரத்ன கோபால்ஸ்

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company


R.G. பில்டிங்ஸ்

65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது தீபாவளித் திருநாள் நல் வாழ்த்துக்கள்



- ✳ L.M.L SELECT II, HONDA வகைகள்
- ✳ HERO HONDA வகைகள்,
- ✳ லான்மாஸ்ரர்கள், பற்றறி வகைகள்,
- ✳ கெல்மேற் வகைகள்.
- ✳ அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
- ✳ மற்றும் யாழ் - கொழும்பு
- ✳ கொழும்பு - யாழ் உள்ள உங்கள் பொதிகளை



## யசோ மோட்டோர்ஸ் அன் ஹாட் வெயர்ஸ்

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ



## பிறேம் நகை மாடம்

(தங்கப் பவுண் வியாபாரம்)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் மற்றும்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
R.பிறேமகுமார் அவர்களும் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் பெருமகிழ்ச்சி



பிறேம் நகை மாடம்
யாழ் வீதி,

R.பிறேமகுமார்
தேவாலய வீதி, கூழாவடி

[C/5314]

# தீபாவளி சிறப்புமலர்


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சுவைமிகு ஐஸ்கிறீம் வகைகளான
நட்ஸ் ஐஸ்கிறீம், ஜெலி ஐஸ்கிறீம், புரூட்சலாட் ஐஸ்கிறீம், வெனிலா ஐஸ்கிறீம், நட்ஸ்பார், மட்டன் றோல், மிக்ஸர், லட்டு, மஸ்கட், கேக் வகைகள் , ஸ்பெஷல் பீடா போன்றவற்றினைப் பெற்றிட

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான ஐஸ்கிறீம் வகைகள்

## குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, T.P. 021- 2222147 யாழ்ப்பாணம்.

## Hulam Cream House

கிளை:- ஆலடிச் சந்தி மானிப்பாய். [C/5318]



அனைவருக்கும் எம் இனிய தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்
நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக
தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட.....



## நியூ நவீனா நகையகம்

## NEW NAVENA NAKAIYAKAM



189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்
நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளை
அறிமுகம் செய்து வைப்பதில் தங்கத் தரணியில் தனியிடம்
வகிக்கும் தங்க நகைகளின் அரங்கம்

## சிறிமாரி நகைமாடம்





49 (187) கே.கே எஸ். வீதி, (சத்திரச் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். [C/5326]

எல்லோருக்கும் எம்மினிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
✡ மாபிள்வகைகள்
✡ குளியலறை உபகரணங்கள்
✡ மட்பாண்ட அன்பளிப்புப் பொருட்கள் யாவற்றிற்கும்

## நியூ விமாசி

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



எம் இனிய அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்
✦ மங்கையர் மனம் மயங்கும் மங்காத அசல்
22கரட் தங்க நகைகளுக்கு.......
✦ நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக
தங்க நகைகளுக்கு

## விவேகா நகை மாடம்



131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# தீபாவளி சிறப்பு மலர்


அனைவருக்கும் எமது இதய பூர்வமான, தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில்
உளமகிழ்கின்றோம்

KINGS ELECTRONICS
எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.
No 64, Stanley Road, Jaffna
T.P- 2223857

ஒரு வருட உத்தரவாதத்துடன்
Pentium III, Pentium IV Computers Deskjet printer, Laserjet Printer, CD- ROM, CD Writer, Capture Card, Scanner, Digital Camera, Empty Cds and all type of Computer Accessories.

T.V, VHSடெக், VCD டெக் MP3டெக், Audio CD, video CD, MP3 CD, தெரிவுசெய்யப்பட்ட பாடல்கள் மற்றும் தரமான எலக்ரோனிக் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்





நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைத்திட
எம் தீபாவளித் திருநாள் இனிய நல்வாழ்த்துக்கள்
உங்களது அங்கங்களில் எங்களது தங்க நகைகள்
மின்னிப் பிரகாசிக்க இன்றே நாடுங்கள்

நியூ லலிதா ஜுவல்லரீஸ்

170, கஸ்தூரியார் வீதி [C/5301] யாழ்ப்பாணம்







அகிலமெல்லாம் அருள் ஒளி பரவ இன்றைய தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகட்டும்
தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற தங்க
ஆபரணங்களின் காட்சிக் கூடம்

வீ. எம். கே ஜுவலர்ஸ்

305, கஸ்தூரியார் வீதி [C/5301] T.PHONE 070 - 212989 > 070 - 212963 யாழ்ப்பாணம்





எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும்
எமது தபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்
நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை அசல் 22
கரட்டில் செய்து பெற்றிட





நியூ பிரியங்கா ஜீவலர்ஸ்





177, கஸ்தூரியார் வீதி [C/5302] யாழ்ப்பாணம்

எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தீபத்திருநாளாம் தீபாவளி
நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
அழகிய கலைநயம்
எழிலுறு தொழில் வளம்
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு





துயா நகைப் பூங்கா

213C, கஸ்தூரியார் வீதி [C/5301] யாழ்ப்பாணம்

# தீபாவளி சிறப்புமலர்




தித்திக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்

புதுமையும் புதுப்பொலிவுடனும்
❄ திருமணப் பட்டுப் புடைவைகள் ❄ சேட்ஸ் ❄ ஸ்கேட் & பிளவுஸ் ❄ கவுண்
❄ சல்வார் கிற் ❄ சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேட் ஆடைகள்
மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்



**சுவேதா சில்க்ஸ்**

இல:- 05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(உங்களுடைய றெடிமேட் ஆடைகளுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்) [C/5319]

---

மலர்ந்திருக்கும் தீபாவளித் திருநாளில்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
☼ நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மோட்டார்சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்களைப் பெற்றிடவும்
☼ இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்களைக் குறைந்த கட்டணத்தில் சொகுசு பஸ் மூலம் கண்டு களித்திடவும்
விரையுங்கள்

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [C/5322]

---

அனைவருக்கும் எமது இதய பூர்வமான தீபாவளி
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புகளை
உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றிடவும் பக்ஸ்,
போட்டோ பிரதி, கொம்பியூட்டர் ரைப்பிங் செய்து கொள்ளவும்
சகல PHONE CARDS வகைகளை பெற்றிடவும்
யாழ்நகரில் சிறந்து விளங்குபவர்கள்

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**



*SRI MURUGAN TELE COMMUNICATION*

SERVICE COMPUTER SYSTEMS AND AGENCY POST OFFICE

T.P :- 021- 2222670, 021-2223588
303, கே.கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்
email :- del - smskr @eureka.lk
Fax :- 021- 2223214
[C/5320]

---

தித்திக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்

☼ செவ்வரத்தை, குறோட்டன், முசந்தாஸ், சைபிறஸ், குயின்பாம், றெசீனா போன்றவற்றை மலிவு விலையில் பெற்றிடவும்
☼ இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான விழாக்களை அழகிய வண்ணக் காட்சியில் வீடியோ மிக்சிங் பிடித்திடவும் நாடுங்கள்

**கிறீன் பாக்**

இல:-152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் [C/5321]

---

புதுப் பொலிவுடன் விளங்கும் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும்
எமது இதய பூர்வமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்

குறைந்த கட்டணத்தில் விமான நிலையம்
வரையிலான "இலவச" பஸ் சேவையுடனும்

✈ 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு "இலவச" பயணச்சீட்டுக்களுடனும்
கூடிய விமானப் போக்குவரத்துச் சேவைகளுக்கு நாடுங்கள்

**SERENDIB**

**விமான சேவை**

**SERENDIB - MANO**
13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777- 801038, 021- 2222007, 0777 - 512648

**SERENDIB - EXP**
500, காலி வீதி, வெள்ளவத்தை.
505632, 500626

மனோஜ்
67/A, WOLFENDALL STREET,
COLOMBO - 13
074 - 612656, 01- 390128, 0777 - 517019

[C/5323]

# தீபாவளி சிறப்பு மலர்

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்



## பிரவின்ஜா ஜுவல்லறி
## புதிய கஜீபன் நகைமாடம்
## ஸ்தாபனத்தினர்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்,
22 கரட் தங்கத்தில் செய்து கொள்ளத் தரம்
நாடுவோர் தவறாமல் நாடும் இடங்கள்

[C/5318]

பிரவின்ஜா ஜுவல்லறி ,
யாழ் வீதி, ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

புதிய கஜிபன் நகைமாடம்,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

## தனிஸ் ரெக்ஸ்


- ஆண், பெண், சிறுவர்களுக்கான றெடிமேற் ஆடைகள்
- சல்வார் கமிஸ்
- சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகள்
- சேர்ட் வகைகள், T.சேர்ட் வகைகள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்
- இன்னும் பலரகப் புடவைத் தினுசுகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



## தனிஸ் ரெக்ஸ்

[C/5317]

நவாலி றோட் T.P 222 2955 ஆனைக்கோட்டை.



தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

## தயாளன்
## வீடியோ அன் கொமினிக்கேசன்



எமது சேவைகள்

- புதிய பழைய CD வீடியோ பிரதிகள் வாடகைக்குப் பெற்றுக் கொளளலாம்
- இன்ரநெற் தொலைத் தொடர்பு சேவை
- லெமினேஷன் (கவரிடுதல்)
- கதிரைகள் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
- நேரடித் தொலைத் தொடர்பு சேவை
- பக்ஸ்
- தரமான போட்டோப் பிரதிகள்
- யாழ் - கொழும்பு பிரயாண ஒழுங்குகளையும் மேற்கொள்ளலாம்.

[C/5315]

யாழ் வீதி T.P 222 3476 , 222 3429 மானிப்பாய்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்

## மங்கை சில்க்ஸ்

மங்கையர் மயங்கும் ஜவுளிகளின் எழில் மிகு காட்சியகம்




## MANGAI SILKS

இல. 8, நவீன சந்தை [C/5314] சுன்னாகம்.

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## அபிநயா மல்ரி எலெக்ரோனிக்ஸ்



கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள்,
கணனி சார் சேவைகள் மற்றும் சகல
விதமான எலெக்ரோனிக்ஸ் பொருட்களை
பெற்றுக் கொள்ளவும், புதிய பழைய பாடல்களை
CD மூலம் பதிவு செய்யவும்

## அபிநயா மல்ரி எலெக்ரோனிக்ஸ்




[C/5311]

யாழ் வீதி, மானிப்பாய்.


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்



## போட்டோ ரவி அன் வீடியோ



Digital Mixing மூலம் வீடியோ படப்பிடிப்புக்கும்
Stillகள் படப்பிடிப்புக்கும் புதிய டிசைன்களில்
Still Colour படங்களை அல்பம் கட்டிப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாட வேண்டிய ஒரே இடம்



## போட்டோ ரவி அன் வீடியோ



இல.139, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.

H.P 0777 -110015
H.P 0777 -110106

(நியூ சயன்ஸ் ஹோல் முன்பாக) [C/5312]

# தீபாவளி சிறப்பு மலர்


தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது தீபத் திருநாள் இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர் ஸ்ரீ வாணி நகை மாடத்தினர்.




ஸ்ரீவாணி நகைமாடம்

அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் தீபாவளித் திருநாளில் எமது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்



தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்



நியூ நகுலா ஜூவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நியூ லலிதாஸ் ஜூவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(C/5305)




நாட்டில் அமைதி நிலவிட எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். தங்க நகை உலகில் தனியிடம் வகிப்பவர்கள் நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகம் செய்பவர்கள்.

சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
PHONE / FAX: 021 - 2222480

(C/5306)

தலைமையகம்:
அருள் முருகன் நகையகம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



கிளையகம்:
சாரங்கன் நகைமாடம்
அன் சென்ரர்.
45, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.



உலகெங்கும் அமைதி நிலவிட தீபத் திருநாள் நல்வாழ்த் துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்




அழகிய கலை நயம் மிக்க உன்னத
தங்க நகைகளைப் பெற்றிட
என்றென்றும் நாடவேண்டிய ஸ்தாபனம்.

பிரசாத் நகையகம்

177GN, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(வின்சர் தியேட்டர் முன்பாக)



அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எங்கள் இனிய
தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்.






- T.V. வகைகள்
- றேடியோ வகைகள்
- டெக் வகைகள்
- கணனிகள்
- அன்ரனா வகைகள்
- கணனி உதிரிப்பாகங்கள்

அனைத்துக்கும்

வி. கே. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
PHONE: 021 - 2222056



# தீபாவளி சிறப்பு மலர்




எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள். ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



விண்ணுலகின் ஜாலங்கள் நிஜமாகும் மண்ணுலகில் றெஸ்பொயின்ட்
வருங்கால உலகின் முதற்தரமான ஆண், பெண் இருபாலாருக்குமுரிய
றெடிமேட் ஆடைத் தினுசுகளின் காட்சியகம்



றெஸ் பொயின்ட் Dress Point

23, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மக்கள் மனதில் இன்பம் பொங்கும் தீபாவளித்திருநாள் நல்வாழ்த்துக்கள்

அழகிற்கு அழகு ஊட்டும் கனவுகளை நிஜமாக்கும், செல்லும் இடம் எங்கும் சிறப்பு,ட்டும்,
கண்களைக் கவர்ந்து இழுக்கும் ஆடைத் தினுசுகளின் காட்சிக் கூடம், சுபமுகூர்த்தப் பட்டுப்
புடைவைகளுக்கு கைராசியான இடம்



மகாநதி புடைவையகம்



16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

16, நவீன சந்தை,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

சமாதானமும், சுபீட்சமும் என்றும்
நிலைத்திட அனைவருக்கும் எமது
தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்



# தீபாவளி சிறப்பு மலர்



எமது அன்பர்கள், நண்பர்கள்,, வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
யாவருக்கும் தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்
உன்னத கலைநயம் மிக்க அசல் 22கரட் தங்க நகைகளை உங்கள்
எண்ணம் போல் தெரிவு செய்திட யாழ் நகரில் சிறந்த நகையகம்

**விதுர்ஷிகா நகையகம்**

1/5 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது இதயங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்



**நந்தா**
ஆடையகம், அழகுமாடம்


* சேட்டிங் சூட்டிங் வகைகள்
* பேபி சூட்
* சாறி வகைகள்
* றெடிமேட் ஸ்கேட் அன் பிளவுஸ்
* சேர்ட் வகைகள்
* T -சேர்ட் வகைகள்
* அழகுசாதனப்பொருட்கள்
* அன்பளிப்புப் பொருட்கள்



இவை அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்

யாழ் வீதி (இலங்கை வங்கி முன்பாக), மானிப்பாய்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது
தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை
அசல் 22 கரட்டில் செய்து பெற்றுக்கொள்ள
தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்



**நியூ கார்த்திகா நகைமாடம்**

இல 06, மகாராஜா கட்டிடம், சுன்னாகம் சந்தி சுன்னாகம்.

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துக்கள்.



**சிவம் ரெக்ஸ்ரைல்**



ஆண், பெண், சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள், சேர்ட், T- சேர்ட் வகைகள், ரவுசர் வகைகள், கவுண் வகைகள், சல்வார் கமிஸ், ஸ்கேட் அன் பிளவுஸ், நவீன டிசைன்களில் சகல ரக சாறி வகைகளையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

கே.கே.எஸ். வீதி

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்

நங்கையர் விரும்பும் நவநாகரிக தங்க நகைகளை அசல் 22 கரட்டில் பெற்றுகொள்ள
தரம் நாடுவோர் தவறாது நாடும் இடம்

**திருமகள் ஜுவல் கிறாப்ற்**




இல.11 A இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

அனைவருக்கும் எமது தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

**ரூபன் புத்தகசாலை**

* பாடசாலை உபகரணங்கள், * காகிதாகிகள், * அலுவலக உபகரணங்கள்



**RUBAN BOOK DEPOT**

மற்றும் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

605, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# தீபாவளி சிறப்புமலர்


எம் இனிய அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும்
இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

## ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம்

- கழுவிய அயடின் கலந்த உப்பு
- அயடின்கலந்த மேசை உப்பு

ஆனையிறவு அயடின் கலந்த உப்பு
ஒரு நோய் நிவாரணி


விநியோகஸ்தர்:-

## S.P.O. என்ரபிறைசஸ்


110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் இதயம் நிறைந்த
தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்

- இலங்கையின் முதற்தரமான மிற்சுயி (MITSUI) அட்லஸ் (ATLAS) சீமெந்து வகைகள்
- தரமான எஸ் - லோன்(S- LON) நீர் வழங்கும் குழாய்கள்
- மற்றும் சகல விதமான கட்டடப்பொருட்களுக்கும் நீங்கள் யாழ் நகரில் நாட வேண்டிய இடம்



## ஜெசிரா ஏஜென்சி



132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone :- 021- 2222407 FAX :- 021- 2222140

எங்கும் மங்களம் பொங்க அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்

## அர்ச்சனா ஜ்வலர்ஸ்



118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்
யாழ் மண்ணின் உன்னத தயாரிப்பு - KIISST

அதி உன்னத தரம், சுவை நீண்டகால தன்மை அடிப்படையில் இயற்கைப் பழங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது
உங்கள் வசதித் தன்மைக்கேற்ப நியாய விலை வேறுபட்ட நிறைகளில்
பிளாஸ்ரிக் கப்களிலும், போத்தல்களிலும் எங்கும் கிடைக்கின்றது.

எமது தயாரிப்புக்களாவன:- ♦ ஸ்ரோபரி ஜாம் ♦ விளாம்பழ ஜாம் ♦ அன்னாசி ஜாம் ♦ பழக்கலவை ஜாம் ♦ அன்னாசி கோடியல் ♦ பசன்புருட் கோடியல் ♦ மிக்ஸ் புருட் கோடியல்

ஆரோக்கிய வாழ்வின் இயற்கை சுவை KIISST

உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர்,
KIISST FOOD MANUFACTURES,
55, OLD PARK ROAD,
JAFFNA,
SRI LANKA.



# தீபாவளி சிறப்புமலர்



வாடிக்கையாளர்களுக்கு எமது
உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்


உருக்கினால் உருவாக்கப்பட்ட
கட்டில்வகைகள், அலுவலக
மேசைகள், குசன் செற்றிகள்,
T.V.ஸ்ரான்ட் வகைகள்
மற்றும்
மரத்தளபாடங்கள் போன்றவற்றை
மொத்தமாகவோ சில்லறையாகவோ
பெற்றுக்கொள்ள



**மாருதி தளபாட நிலையம்**
27, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

**மாருதி வெல்டிங் வேக் சொப்**
14/1, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்







நாளுக்கு நாள்
மாறும் நவ நாகரிக
ஆடைத் தினுசுகளை
உடனுக்குடன்
அறிமுகம் செய்து
வைப்பதில்
யாழ்.நகரில்
முன்னோடியாகத்
திகழ்பவர்கள்
தையல் கலையின் இன்றைய முன்னோடிகள்

**CITY TAILORS**
(Specialist in wedding Coats& Suits)

**சிற்றி ரெக்ஸி & ரெயிலர்ஸ்**
73, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

- ❈புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள்
- ❈ T.V. டெக் வகைகள்
- ❈அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
- ❈ ரேடியோ வகைகள்
- ❈ அன்ரனா வகைகள்

போன்றவற்றை மொத்தமாகவோ சில்லறையாகவோ யாழ் நகரில் பெற்றுக் கொள்ள

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

**E.S.PERAMPALAM AND CO**

(PEPSI,MIRINDA,7UP போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

50, 52, 54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
Fax: 021 - 2222368
T.Phone : 021 - 2222988
021- 2223096

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

- ✡ கட்டடப் பொருட்கள்
- ✡ பெயின்ற் வகைகள்

போன்றவற்றை நிதான விலையில் ஒரிடமாகப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**

**CALTEX 2T** ஒயிலுக்கான வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்.

**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.Phone: 021 - 2222833